பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 சித்திரை 5 ஜ-ஆண் 1 இதழ் 66
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-4-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1980-4-17 PERIODICALS DIVISION MAIN LIBRARY
UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1980-4-17 PERIODICALS DIVISION MAIN LIBRARY

## மாவை சேனாதிராஜா கூட்டணியிலிருந்து ராஜினாமா!

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர் இயக்கச் செயலாளர் பதவியிலிருந்த மாவை சேனாதிராசா ராஜினாமாச் செய்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்குழு, நடவடிக்கைக்குழு ஆகியவற்றிலிருந்தும் திரு. சேனாதிராஜா ராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் தமது ராஜினாமாக் கடிதத்தை நேற்று தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தார்.

இவரது ராஜினாமாவையடுத்து கூட்டணி செயற்குழுவிலிருக்கும் தமிழ் இளைஞர் பேரவையின் 10 உறுப்பினர்களில் சிலரும் ராஜினாமாச் செய்வார்களென்று கூறப்படுகிறது. (கு)

# சிமெந்தின் விலை அடுத்தவாரம் குறையும்

(கொழும்பு)
சிமெந்தின் விலை அடுத்த வாரம் முதல் குறைக்கப்படும் என்று சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அஜந்தா விஜயசேன தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து பெருமளவு சிமெந்து வந்து கொண்டிருப்பதாகவும் அடுத்த வாரம் கப்பல்கள் வந்து சேர்ந்ததும் சிமெந்தின் விலைகள் குறைக்கப்படும் என்று திரு. விஜயசேன கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் இச்சிமெந்து வந்து சேர்ந்ததும் தட்டுப்பாடின்றி சிமெந்து விநியோகம் நடைபெறும் என்றும் இறக்குமதி செய்யப்படும் சிமெந்தின் விலையைக் கருத்தில் கொண்டே விலைகுறைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சுமார் ஆறு ரூபா தற்போதையவிலையிலிருந்து குறைக்கப்படலாம் என்றும் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார். (கு)

# அமெரிக்க தூதர் இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் அமெரிக்கத் தூதுவராகச் சமீபத்தில் பதவியேற்ற திரு டொனல்ட் ஆர். ருசெயின்ற் இன்று யாழ்ப்பாணம் வருகிறார். இங்கு இரண்டு தினங்கள் தங்கவிருக்கும் அமெரிக்கத் தூதுவர் பல வைபவங்களில் கலந்துகொள்ள விருக்கிறார்.

### இன்றைய நிகழ்ச்சி

இன்று பிற்பகல் யாழ் செயலகத்தில் யாழ் மாவட்ட செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியை அமெரிக்கத் தூதுவர் சந்தித்து கலந்துரையாடுவார்.

இன்று மாலை ஆறுமணியளவில் இலங்கை ஐக்கிய நாடுகள் சங்க யாழ். கிளை அங்கத்தவர்களை அமெரிக்கத்தூதுவர் சந்திப்பார். யாழ். நூலக கேட்போர் கூடத்தில் இச்சந்திப்பு இடம்பெறும்.

அமெரிக்கத் தூதுவரைக் கௌரவிக்குமுகமாக இன்று இரவு யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி விருந்தளிப்பார்.

### நாளைய நிகழ்ச்சி

நாளைக்காலை, அமெரிக்கத் தூதுவர், சாவகச்சேரி பொது நூல் நிலையத்துக்குச் சென்று இலவசமாக நூல்களை வழங்குவார். இதனைத் தொடர்ந்து அவர், நல்லூர் கந்தசுவாமி கோவிலை தரிசிப்பார். இதன் பின்னர் நாளை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்வார். நாளை பிற்பகல் யாழ் பொதுசன நூல்நிலையத்துக்கு அவர் விஜயம்செய்யும் போது இலவசமாக பல புத்தகங்களை அன்பளிப்புசெய்வார்.

நாளை மாலை, சுபாஸ்விருந்தினர் விடுதியில் அமெரிக்கத் தூதுவர் விருந்தளிப்பார்.

# வல்வை கோஷ்டி மோதல்: 6 பேர் கைது!

## சமரசம் ஏற்படுத்த எம். பி. முயற்சி

(தெல்லிபடி)
வல்வெட்டித்துறையில் இரு கிராமத்தவர்களுக்கிடையே ஏற்பட்ட கோஷ்டிக் கலவரம் தொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிசார் ரோந்து சுற்றி வருவதுடன் நிலைமைகள் கட்டுக்கடங்கி பதட்ட நிலை தற்போது நீங்கிவிட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்வெட்டி, கம்பர்மலை ஆகிய இரு கிராமத்தவர்களிடையே சில தினங்களாக இடம்பெற்று வந்த கோஷ்டி மோதல் காரணமாக பலர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்தது டன் பல வீடுகளுக்கு தீ வைத்தல் போன்ற சம்பவங்களும் நடைபெற்றன.

பழைய பகைமையே இக்கோஷ்டி மோதலுக்குக் காரணமெனத் தெரியவருகிறது.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து ஆகியோர் இக்கோஷ்டியினரிடையே சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்துவருகின்றனர்.

உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் இக்கோஷ்டி மோதலில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினரையும் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதுசம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையில் புலன் விசாரணை நடைபெறுவதுடன், சம்பவம் நடைபெற்ற இடங்களில் பொலிஸ் ரோந்தும் நடைபெற்று வருகிறது.

இம்மோதலில் காயமடைந்தவர்கள் ஊறணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வெ-கு)

## “ ‘ஈழம்’ கோருவோரை தேசத்துரோகிகளாகக் கருத வேண்டும்!”

### பாராளுமன்றத்தில்பிரேரணைவருகிறது

(கொழும்பு)
“ ‘ஈழம்’ ” கோரிக்கை விடுப்போரை தேசத்துரோகிகளாகக் கருதி தண்டிக்க வேண்டும்” என்று கோரும் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவர பொல்காவலை எம். பி. திரு. சுனில் இரஞ்சன் ஜெயக்கொடி முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அப்பிரேரணை மேலும் கூறுவதாவது ‘ஈழம்’ கோரிக்கை விடுக்கும் தனிப்பட்ட அல்லது இயக்கரீதியான நபர்கள் நாட்டை இருகூறுகளாக்

[8ம் பக்கம் பார்க்க]

### சட்டவிரோத சைக்கிள் சவாரி:

# நாற்பது பேருக்கு தலா 100 ரூபா அபராதம்!

(யாழ்ப்பாணம்)
சட்டத்தை மீறி சைக்கிளில் சவாரி செய்த நாற்பது பேருக்கு தலா 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி நாற்பது பேரையும் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிசார்நேற்று ஆஜர்செய்த பொழுது அவர்களை தலா 100 ரூபா அபராதம் செலுத்தும்படி நீதிவான் திரு. ரி. யோகநாதன் தீர்ப்பு வழங்கினார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதியின் போக்குவரத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சேனாதிராசாவின் பணிப்புரையின்மீது போக்குவரத்து பொலிஸ் சார்ஜன்ட் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் திரு. எம் பரமானந்தம் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

ஒருவழிப்பாதை வழியாகவும், பக்கம் பக்கமாகவும், வெளிச்சமின்றியும் சைக்கிளில் சென்ற இவர்களில் பலரை போக்குவரத்து பொலிஸ் சார்ஜன்ட் திரு. ஆ. பாலசுப்பிரமணியம் எச்சரித்தும் மீண்டும் இவர்கள் சட்டத்தை மீறி சைக்கிளில் சென்றதால் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனராம்.

### நேற்றிரவும்...

வெளிச்சம் இல்லாமலும், ஒருவழிப்பாதை வழியாகவும் சைக்கிளில் சவாரி சென்றவர்கள் நேற்றிரவு சுமார் எட்டு மணியளவில், கஸ்தூரியார் வீதி ஸ்டான்லி வீதி சந்தியில்,

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று சிறிமா பிறந்ததினம்

(கொழும்பு)
முன்னாள் பிரதமரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் அத்தனகல எம். பி. யுமான திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் பிறந்ததினம் இன்றாகும்.

# இந்திராவை கொலைசெய்ய சதித்திட்டமிட்டனர்

## விசாரணையில் வெளிவந்த தகவல்

புதுடில்லி, ஏப். 16
இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கொலை செய்ய ‘ஜனசங்’ இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் சதித்திட்டமிட்டார்கள் என்று தெரியவந்துள்ளது.

கத்தியொன்றைவீசி திருமதி காந்தியைக் கொலைசெய்ய முயன்றபோது கைதுசெய்யப்பட்ட இளைஞர் ராம் சங்லால் வாணி மீதான விசாரணையின் போதே மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

இக்கொலைமுயற்சி தொடர்பான விசாரணை டில்லி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நடைபெற்றது. 48 மணித்தியாலங்கள் நடைபெற்ற இவ்விசாரணையின்பின்னர் இச்சதித்திட்டம் தெரியவந்துள்ளது.

‘ஜனசங்’ இயக்கத்திலுள்ள வலதுசாரி போக்குடைய தீவிரவாதிகளே இவ்வாறு திட்டமிட்டு வந்துள்ளனர். இந்து ஆட்சியொன்றை நிறுவுவதற்கு முயன்று வரும் இவ்வியக்கம் கடந்த மூன்று ஆண்டுகளிலும் அரசியல் பணரீதியாக வளர்ந்து வந்துள்ளது. (கு)

### மிருகபலி தடை

## ரத்து கோரிக்கை: திணைக்களம் நிராகரித்தது

(கொழும்பு)
சிலஆலயங்களில் மிருகங்கள் பலியிடுவதற்கு அரசு விதித்த தடையை ரத்துச்செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் இந்து சமயத் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டது.

ஆலயங்களில் மிருகங்கள்பலியிடுவதற்கு இவ்வாண்டு ஜனவரி பொங்கல் தினம்முதல் இந்து சமயத் திணைக்களம் தடைவிதித்திருந்தது.

இதனை அடுத்து இத்தடையை ரத்துச் செய்யுமாறு [illegible] பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் செல்லையா இராசதுரையிடம் கோரியிருந்தனர்.

பலியை நிறுத்தியதனால் ஏற்கனவே பலியிடுவதற்கு நேர்த்திக்கடன் செய்தவர்களும் குறிப்பிட்ட கோவில்களை அண்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்களும் நோய் நொடிகளினாலும் வேறு கஷ்டங்களினாலும் பெரிதும் பாதித்து வருகின்றனர். எனவே மீண்டும் மிருகங்களைப் பலியிட அனுமதிவழங்குமாறு

[8ம் பக்கம் பார்க்க]

## தொண்டமான் தமிழ்நாடு செல்கிறார்

(கொழும்பு)
கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ் தொண்டமான் நாளை மறுதினம் இந்தியா பயணமாகிறார்.

இந்நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு தலைநகரிலிருந்து புறப்படும் அமைச்சர் அடுத்த மாதம் 5ம் திகதி தாயகம் திரும்புவார். மதுரையி

[8ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HONDA CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. புதிய பற்றரியும் இரு கண்ணாடிகளும் உண்டு. தொடர்புகொள்ளவும். சந்திரயர் வேக்ஸ், 218/2 முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8885 5494

புத்தம்புதிய டெக் இரண்டு பயினியர், பிலிப்ஸ் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். றேடியோமனுவல், யாழ்ப்பாணம். 5467

### தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் கொடுக்கலாம். தொடர்பு: 73, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7856 (5482)

ஸ்ரான்லி வீதியிலுள்ள பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு 18 வயதுக்கு மேற்பட்ட வேலை பழகுபவர்கள், ஊதுபவர்கள், Blowers) குமிழர் (Bubblers) மறுப்புவர்கள் (Fusers) தேவை. உடனடியாக நேரில் வரவும். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, 25, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 5485

## உலொறி பொடி அடித்தல்

எமது சங்கத்தின் புதிய இசூஸ் (Isuzu) உலொறிக்கு பொடி அடிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 21-4-1980 அன்று அல்லது முன்னர் கிடைக்கக் கூடியதாக பொது முகாமையாளர், பூநகரி ப. நோ. கூ. சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தபால் மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் விலாசமிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையுடன் மீளளிக்கப்படாத ரூபா5-00 தபால் கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
கரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.

5478

அளவெட்டிதெற்கு காட்டுப்புலம் காளி கோவில் கட்டிட நிதிக்காக நடாத்திய

### அதிஷ்டலாபச் சீட்டின் முடிவுகள்

இலக்கம்
1ம் பரிசு 1127
2ம் பரிசு 386
3ம் பரிசு 1364
4ம் பரிசு 1047
மூன்று ஆறுதல் பரிசில்கள்:
(1) 1877 (2) 1081
(3) 1135

காளிகோவில்
தொண்டர்சபை

5497

## உரிமை கோரப்படாத சைக்கிள்

(மன்னார்)

பாதுகாப்புச்சேவைபொறுப்பதிகாரி திரு வி. பிரான்சிஸினால் பெரியகடையிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு முன்பாக கண்டெடுக்கப்பட்ட சைக்கிள் அன்று இரவே மன்னார் பொலிசில் ஒப்படைக்கப்பட்டபோதிலும் இதுவரை எவரும் உரிமை கோரவில்லை எனத் தெரியவருகிறது.

## சைக்கிள் பாவிப்பாளர்களுக்கு ஓர் நற்செய்தி

ராஜா ஹமில்டன் (Raja Hamilton) 22''
சைக்கிள்கள் B/90 சீற்றுடன் ரூபா 895-00
றோயல் ஹமில்டன் (Royal Hamilton) 21'' லேடீஸ்
சைக்கிள்கள் பெல், ஸ்ராண்ட்,
முழுச்செயின் கவருடன் ரூபா 1, 100-00

மேற்கூறிய சைக்கிள்கள் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

'ஓரியன்ஸ்' (Orions) - யப்பானில் முழுமையாக தயாரிக்கப்பட்டது. (12 வோல்ட் சன்யோ டைனமோசெற், B/90 சீற், பெல், ஸ்ராண்ட், வெள்ளிக் கம்பி, பம்ப் முதலியவற்றுடன்) ரூபா 1650-00

ஆனி 80 நடுப்பகுதியில் விற்பனைக்கு வரும். ஓடர்கள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு வழங்கப்படும்

ஏக இறக்குமதியாளர்கள்:

**சிலோன் மேர்சன்ஸ் லிமிட்டெட்,**
484, ஆஸ்பத்திரி வீதி,
தொலைபேசி: 234 யாழ்ப்பாணம் (5499)

## மெசின் மைண்டர் தேவை

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்
நேரில் வரவும்

## ஆர். எஸ். அச்சகம்

149, கே. கே. எஸ், வீதி. யாழ்ப்பாணம்.
5491

## ஓட்டோ ரிக்ஷா சாரதிகள் தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் ஓட்டோரிக்ஷாசேவைக்குஅனுபவமும்தகுதியும் உள்ள சாரதிகள் தேவை. இரண்டு நற்சான்று பத்திரப் பிரதிகளுடன் 21-4-80ற்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

**ராம்சன்ஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
5492

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

1. நன்னித்தம்பி சியம்பு நாதனும்
2. பெண் பாக்கியலட்சுமியும், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

எதிராக வழக்காளிகள்

இல: ஈடு/15042

சின்னப்பொடியன் கந்தையா கைம்பெண் சின்னத்தங்கச்சி தனக்காகவும் சின்னப்பொடியன் சந்தையாவின் சட்டப்பிரதிநிதியாகவும், தாவடி தெற்கு, கொக்குவில். எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் ஈடு/15042-ம் வழக்கில் கிடைத்த கட்டளைப்படி கீழ்க்காணும் ஆதனங்கள் 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

10,000/- ரூபாவும் இன்னும் 5,000/- ரூபாவிற்கு 19-9-73 தொடக்கம் 20-2-1979 வரைக்கும் நூற்றிற்கு 15% வீத வட்டியும் அதன் மேல் முழுப் பணம் இறுக்கும் வரைக்கும் அதிதொகைக்கு 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு 877/17 சதமும் (ஏற்பட்டசெலவு 617/27½, நடைபெற வேண்டியசெலவு 139/87½ மேலதிக செலவு 120/02.)

### ஆதனடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோவிற்பற்று தாவடியிறை 'பத்தானை' பர நில. லா. 6½ கிழக்கெல்லைக் கிணற்றில் பங்கும் எல்லைகிழக்கு அப்புத்துரை பெண் அழகம்மாவினுதனமும் கீழே விபரிக்கப்படும் ஆதனமும் வடக்கு வாய்க்கால், மேற்கு வேலன் கறுப்பையாவுக்கும் பொன்மணிக்குமுரியவாதனம், தெற்கு எனதாதனமும் பாதை முசப்பும் இதடங்கலும்.

2. மேற்படி 'பத்தானை' பர. நில. லா. 5. எல்லைகிழக்கு குமாரசாமி பெண் இரத்தினத்தினுதனம் வடக்கு அப்புத்துரை பெண் அழகம்மாவினுதனம் மேற்கு மேலே விபரிக்கப்பட்ட ஆதனம், தெற்கு கந்தன்செல்லனுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். இதடங்கலும் பதிவு ஏச். 380/78, ஏச்286/88,

**தா. க. பொன்னுத்துரை J. P.**
கொமிஷனரும் விளம்பிப்பாளரும்.

"அகிலகம்"
28/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம். 5487

## பகிரங்கஏலத்தில் காணிகள் விற்பனை

### யாழ்ப்பாணம் மாவட்டம்

வழக்கு இல: நம்பிக்கைச் சொத்து 19.

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் புத்தூரில் எழுந்தருளியிருக்கும் சிவன்கோவிலின் தர்மகர்த்தாவாகிய சிவசம்பு சித்தம்பலம் மேற்படி வழக்கில் செய்துகொண்ட விண்ணப்பத்தின்பேரில் மேற்படி கோவிலின் ஆதனங்களாகிய பின்னால் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் காணிகளை குறித்த தர்மகர்த்தா எனக்கு அளித்த அதிகாரத்தின்படி என்னால் அந்தக் காணிகளுக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பின்வருமாறு தேதிகளில் நேரங்களில்

**12-05-1980**

முதலாம் காணி முற்பகல் 9—00 மணிக்கு
இரண்டாம் காணி முற்பகல் 10—00 மணிக்கு
நாலாம் காணி முற்பகல் 11—00 மணிக்கு

**13-05-1980**

ஆறும் காணி முற்பகல் 9—00 மணிக்கு
மூன்றும் காணி முற்பகல் 11—00 மணிக்கு

**14-05-1980**

ஐந்தாம் காணி முற்பகல் 9—00 மணிக்கு
ஏழாம் காணி முற்பகல் 10—00 மணிக்கு

### காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று, புத்தூர் தெற்கிறை "நாரங்கொலை" நெ. பரப்பு 36 இணறும் அடலிகளும் எல்லை கிழக்கு அருணாசலம் கனகசபைக்குரியவாதனம்: வடக்கு சின்னப்பா பெண் சின்னப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் சிற்றம்பலம் மளவராயருக்குமுரிய வாதனங்கள் மேற்கு சின்னப்பா பெண் சின்னப்பிள்ளைக்கும் பங்காளருக்கும், சின்னவன் பண்டாரிக்கும் பங்காளருக்கும் உரிய வாதனங்கள், தெற்கு: ஒழுங்கையும், சிற்றம்பலம் மளவராயருக்கும் ஆறுமுகம் கந்தருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள் இடங்கலிற் சொரியலாய் 1/3 பங்கு இவ்வாதனம் ரூ 6000/-க்கு குறையாமல் விற்கப்படும்.

(2) மேற்படி புத்தூர் தெற்கிறை "வேம்பிராய் கலட்டியும் மென்நிலமும்" நில பரப்பு நாலும் (நில பர4) பனைகளும் எல்லைகிழக்கு அம்பலம் நீலாயினுக்கும் பங்காளருக்கும் உரியவாதனம் வடக்கு: றேட்டு, மேற்கு: அருணாசலம் கனகசபைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், தெற்கு: சிறப்பிட்டி கிராமஎல்லை இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி (½) இவ்வாதனம் ரூபா 500/-க்கு குறையாமல் விற்கப்படும்.

(3) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோவிற்பற்று டலாலியிறை "கச்சாய் தோட்டமும் மிரியன் காடும்" ஏ150-றூ1-பேட்சு7 இதில் கிழக்குப் பக்கமாய் ஏ103-றூ2-பேட்சு 4 2/3ம் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு: மிரியன் குளமும், கார்த்திகேசு கணபதிக்கும் தம்பிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள், வடக்கு: ஒழுங்கையும் கணபதி தம்பையாவுக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள், மேற்கு: டேவிற் ஆறுமுகத்திற்குப், கந்தப்புச் செட்டியாருக்குமுரிய வாதனங்கள். இக்காணிக்கு வரும் ஒழுங்கை முசப்பும் தாம் வசிப்பதற்குரிய மறுபேருக்குமுரிய வாதனம், தெற்கு: கந்தப்பச் செட்டியாருக்குரிய ஆதனம் றேட்டு இதடங்கலும். இவ்வாதனம் ரூபா 52000/-க்கு குறையாமல் விற்கப்படும்.

(4) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் கோவிற்பற்று, புத்தூர் வடக்கிறை "கருகட்டை" நில - பர - 21 செய்பயிர், வான்பயிர்களும் எல்லை கிழக்கு: வயித்திலிங்கம் பெண் சின்னப்பிள்ளையின் உரிமைக்காரரினுதனம், வடக்கு: கனகசபை முத்துக்குமாருவின் உரிமைக்காரரின் ஆதனம், மேற்கு: கனகசபை முத்துக்குமாருவினுரிமைக்காரருக்கும் மறுவுக்குமுரிய ஆதனம், தெற்கு: பொன்னையா பெண் மாரிமுத்தவும் மறுவும் இதடங்கலில் 3/8 பங்கு (எட்டில் மூன்று) இவ்வாதனம் ரூபா [illegible]000/-க்கு குறையாமல் விற்கப்படும்.

(5) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சிறுப்பிட்டி இறை "தப்பனை" நில - பர - 18 எல்லை கிழக்கு சங்கரி சின்னத்துரையும் மறுவும் வடக்கு புத்தூர் சிவநாதர் கோயிலாதனம் சோமாஸ்கந்த அன்னசத்திரத்துக்குரியவாதனம், மேற்கு கந்தர் சரவணையினுரிமைக்காரரினுதனம் தெற்கு சங்கரப்பிள்ளை சேதுபதி கந்தையா அருணாசலத்துக்குரியவாதனம், கிணறும் இதடங்கலும். இவ்வாதனம் ரூ. 18000/-க்கு குறையாமல் விற்கப்படும்.

(6) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் ஆவரங்காலிறை "தென்னைப்பாலத்தறை" நில. பர. 8½ எல்லை கிழக்கு றேட்டு வடக்கும் மேற்கும் மளவராயர் கந்தையாவினுதனம் தெற்கு சங்கரப்பிள்ளை தில்லைநாதருக்குரியவாதனம். இதடங்கலில் சொரியலாய் அரைவாசி. இவ்வாதனம் ரூ. 17000/-க்கு குறையாமல் விற்கப்படும்.

(7) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சிறுப்பிட்டியிறை "பாதியனுதனை" நில. பர. 2. செய்பயிர்வான்பயிர்களும் எல்லைகிழக்கு கனகசபை பெண் சின்னப்பிள்ளையினுதனம் வடக்கு: அல்லிக்குட்டி பெண் நல்லிப்பிள்ளையினுதனமும் மறுவும் மேற்கு: வல்லிபுரம் பெண் சின்னப்பிள்ளையினுதனம். தெற்கு: சுப்பிரமணியம் பெண் பராசக்தி ஆதனம், இதடங்கலில் சொரியலாய் அரைவாசி (½) இவ்வாதனம் ரூபா 750/-க்கு குறையாமல் விற்கப்படும்.

குறிப்பு: ஏலம் கோரி முடிந்ததும் அதிஉயர் கேள்விக்காரரை கொள்விலைக் காரராக வெளிப்படுத்தியவுடன் கொள்விலை முழுத்தொகையையும் ஏலதாரரின் செலவையும் ரொக்கமாக செலுத்தவேண்டும்.

**செ. விசாகரெத்தினம்,**
ஏலதாரர்.

133, பருத்தித்துறை றேட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
10-4-1980

5496

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உண்மை சொற்களின் சத்தமின்றி அகத்தே பேசுகிறது. அதுவே மௌன பாஷை. அதுவே கடவுளின் நுண்குரல். ஒருதெளிவான மனச்சாட்சி மகிழ்ச்சி அளிக்கிறது. அங்கு மனவேதனைகள் இல்லை.

— சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### யோகரத்தினத்தின் உலக சாதனை

பல்வேறு நிலைகளில் கால்களைக் கட்டி கடலில் தொடர்ந்து மிதந்தல் சாதனை 28-3-80 பி. ப. 4-46க்கு வல்வையில் திரு. து யோகரத்தினத்தால் ஆரம்பிக்கப்பட்டு 31-3-80 மு. ப. 2-15 மணிக்கு 57 மணி 29 நிமிடங்களின் முடித்த அளவில் வெற்றிகரமாக நிகழ்த்தப்பெற்றது யாவரும் அறிந்தது.

இவ்விடயங்களைச் சிறப்பாகப் பிரசுரித்தமைக்காக 'ஈழநாடு' நிறுவனத்திற்கு மனப்பூர்வமான நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சாவதேச ரீதியில் சவால் விடுத்த பின்னர் நிறைவேற்றியதன்மூலம் மிதத்தல் சாதனையை முதன்முதலாக இவரே உருவாக்கியுள்ளார். ஆதலினால், அவர் முன்னர் அறிவித்திருந்தமைபோல் 75 மணித்தியாலங்களை காலசூழ்நிலை கோளாறு காரணமாய் நடத்தி முடிக்க முடியாமல்போயினும், பல்வேறு நிலைகளில் 57 மணி 29 நிமிடங்கள் மிதந்து ஒரு புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

ஆனால் பத்திரிகைகள் ('ஈழநாடு' அல்ல) 'உலக சாதனை முயற்சியைக் கைவிட்டார்' என்று செய்தி வெளியிட்டிருந்தமை கவலைக்குரியதாகும்.

இந்நிகழ்ச்சிக்கு கொழும்பு புளூ அட்வென்சர்ஸ் கழகம், கொழும்பு கின்ரொஸ் நீச்சல் கழகம், வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நடுவர்களாகக் கடமையாற்றினர். கால நிலை சம்பந்தமான அளவீடுகளைத் தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள ஆராய்ச்சி நிலையத்தார் கணிப்பீடு செய்தனர். இலங்கை விளையாட்டமைச்சின் பிரதிநிதியான யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. செல்வராசா, உலக சாதனை வீரன் ஆழிக்குமரன் ஆனந்தன் ஆகியோரும் நடுவர்களாகப் பணிபுரிந்தமை குறிப்பிடவேண்டியதொன்றாகும். இச்சாதனைபற்றிய பூரண அறிக்கையை யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. செல்வராசா விளையாட்டு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

க. சிவாஜிலிங்கம்
செயலாளர்,
வல்வை. ச. ச. சேவா நிலையம்.
வல்வெட்டித்துறை

[திரு. யோகரத்தினத்தின் சாதனையை 'ஈழநாடு' மட்டும் 'உலக சாதனை' என்ற தலைப்பில் முற்பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது ஆ—ர்]

ஃ ஃ ஃ

### சுகாதாரப் பகுதியினர் கவனிப்பார்களா?

யாழ். மாவட்ட சுங்க இலாகா காரியாலயத்திற்கு எதிரிலும் யாழ். அரசாங்க மரக்கூட்டுஸ்தாபனத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ள இரண்டு மலகூடங்களில் ஒன்றைச் சிலகாலமாக அத்துமீறிக் குடியேறியவர்கள் அடைத்துத் தமதாக்கிக்கொண்டார்கள். மற்றொன்று பொதுமக்களின் கண்பார்வைக்குத் தெரியாதபடி செய்து பொதுமக்கள் போக முடியாது பாதையிட்டு, அத்துமீறிக் குடியேறியவர்கள் பொதுமக்கள் புழங்காதபடி செய்துள்ளார்கள். இம்மலகூடத்திற்குச் செல்வதானால் அங்கே போத்தல் துண்டுகளையும் வெட்டிய தகரத்துண்டுகளையும் வெற்றிகொள்ளவேண்டும்.

இப்பிரச்னையைப்பற்றிப் பலமுறை மேலதிகாரிகளுக்கு அறிவித்தும் பயனற்றுப்போய்விட்டது. கச்சதீவு அந்தோனியார் கோவில் உற்சவகாலங்களில் மட்டும்தான் இம்மலகூடங்கள் கழுவிச் சுத்தம் செய்வார்கள். ஆனால் இம்முறை அந்நிலை ஏற்படவில்லை. பலர் பாவித்து வந்த இம்மலகூடங்கள் இப்போது பாவிக்க முடியாமல் போய்விட்டன. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். யாழ். சுகாதாரப்பகுதியினர் இதுபற்றிக் கவனம் செலுத்துவார்களா?

க. மணிவண்ணன்
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

### உயிர்ப்பலிக்கு கடவுள் ஆதரவா?

உலகம் தோன்றியகாலம் முதலாகவே, சைவசமயம் இருந்து வருகிறது. அன்று தொட்டு எல்லாப் புராணங்களும் உபநிடதங்களும் ஆகமங்களும் கொல்லாமையை வலியுறுத்தி வந்துள்ளன. கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லாஉயிரும் தொழும் என்றார் வள்ளுவர். பகுத்தறிவுள்ள நாமும் உயிர்கள் படும் அவஸ்தையைக் கண்டு மனம் கலங்குகிறோமல்லவா. இந்த உயிர்ப்பலிக்குக் கடவுள் சம்மதிப்பார் என்று எந்தப்பாமரனும் நம்பமாட்டான். பலியைநிறுத்தியதால் பலதுன்பங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதுவெறும் கூற்று.

உயிர்ப்பலியை விரும்பியேத்தும் தெய்வத்தைவிட்டு எத்தனையோ பலியிடாத கோவில்களில் இருக்கும் தெய்வங்களை வணங்கினால் நமது துன்பங்கள் அகலாதா? நமது மனம் தான் கோயில். கடவுள் ஒரு காலமும் ஒன்றும் கேட்கமாட்டார். இந்த நேர்த்திகளால் அவருக்கு என்ன நன்மை? வேறுவகையான திருப்பணி, திருவிளக்கிடல் போன்றவற்றைச் செய்தால் ஒரு துன்பமும் எமக்குவராது. நமது அறிவுக்கேற்ற மாற்றம் வேண்டும்.

அருணாசலம் [illegible]
அரியாலை கிழக்கு
அரியாலை

# ★ இந்து சமுத்திரப் பிரதேசத்திலிருந்து ராணுவ தளங்கள் விரைவாக அகற்றப்பட வேண்டும்!

## மோல்டா மகாநாட்டில் 'தர்மர்'

ஏகாதிபத்யத் தளங்களுக்கு எதிரான சர்வதேச மாநாடு, மோல்டாவில் கடந்த மாதம் 28ந் தேதியிலிருந்து 30ந் தேதி வரை நடைபெற்றது. இம்மாநாட்டில் இலங்கைத் தூதுக்குழுவின் தலைவராகக் கலந்துகொண்ட [illegible] பூர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், மானிப்பாய் எம். பியுமான திரு. வி. தர்மலிங்கம் ஆற்றிய உரை இங்கு முழுமையாகத் தரப்படுகிறது. இந்தியா உட்படப் பல ஆசிய நாடுகள் கலந்துகொண்ட இம்மாநாட்டில் ஆசிய பிராந்தியத்தின் சார்பில் திரு. தர்மலிங்கம் உரை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"இம்மாநாட்டின் இந்த ஆரம்ப ரீதியான தொடக்க நிகழ்ச்சியில் ஆசியப் பிராந்திய மக்களின் சார்பில் சில வார்த்தைகள் பேசுகின்ற சந்தர்ப்பத்தை எனக்கு அளித்ததன் மூலம் இலங்கை, ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமைக் குழுவுக்கு அளிக்கப்பட்ட கௌரவத்துக்காக இம்மாநாட்டின் அமைப்பாளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது எனக்கு அளிக்கப்பட்ட மிகவும் மதிப்பு வாய்ந்த ஒரு கௌரவமும், சிறப்புரிமையாகும். இலங்கை ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமைக் குழு இதனைப் பெரிதும் வரவேற்கிறது.

"இம்மாநாடு மத்தியதரைப் பிரதேசத்திலும், உலகின் ஏனைய பகுதிகளிலுமான ஏகாதிபத்தியத் தளங்களுக்கு எதிரான சர்வதேச மாநாடாகும். மோல்டா ஒரு மத்திய தரைப் பிரதேச நாடு என்பதனால் மட்டுமல்ல, வீரர்களைப் பெற்ற ஒரு நாடு என்பதாலும் இத்தகைய ஒரு மாநாடு மோல்டாவில் நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாகும். இரண்டாம் உலக யுத்தத்தின்போது மோல்டா கௌரவிக்கப்பட்ட ஒரு நாடு என்பதுடன், வீரச் செயலுக்கான 'ஜோர்ஜ்' வீர விருதையும் இது பெற்றது. வீரச் செயல்களுக்காகத் தனிப்பட்ட மனிதர்களுக்குக் கௌரவமும், பதக்கம், விருதுகளும் அளிக்கப்படுவதை நாம் அறிவோம். ஆனால் நாஸி, பாஸிஸப் படைகளின் தம்மீதான கொடூரத் தாக்குதலைத் தைரியத்தோடு எதிர்த்து நின்ற மக்களின் செயலுக்காக ஒரு நாடே இத்தகைய ஒரு விருதைப் பெற்றிருப்பது உலகிலேயே அநேகமாக மோல்டா ஒன்றாகத்தானிருக்கும்.

"யுத்தத்தின்போது மோல்டா நிர்மூலமாக்கப்பட்டது. அந்த அஸ்தியிலிருந்தே இன்று மோல்டா மீண்டும் எழுந்து நிற்கிறது. மோல்டா மக்களின் தைரியம் நன்கு சோதித்து அறியப்பட்டுவிட்டது. போரில் தங்கள் தைரியத்தை அவர்கள் காண்பித்தார்கள். சமாதானத்துக்கான தங்களின் போராட்டத்திலும் அவர்கள் சமமான தைரியத்தைக் கொண்டிருக்கிறார்கள். இக்காரணங்களால் தான் ஏகாதிபத்தியத்திற்கும் ஏகாதிபத்திய தளங்களுக்கும் எதிரான போராட்டத்திற்கு ஒரு திட்டத்தை வரையும் இத்தகைய ஒரு மாநாட்டுக்கு மோல்டா பொருத்தமான ஓரிடமாகிறது.

"'யுத்தமும், சமாதானமும்' என்ற விடயம் உலகில் இன்று அசட்டைக்குரியதாக இருக்கிறது என்பதில் ஐயமில்லை. பல லட்சக்கணக்கான மக்கள் காயப்படுத்தப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட இரண்டு உலக யுத்தங்களை நாம் கண்டுவிட்ட பின்னரும் தங்களது ஆக்கிரமிப்புத் திட்டங்களை ஏகாதிபத்தியப் பிற்போக்குவாதிகள் கைவிடவில்லை. எங்குமே பதட்ட நிலை தான்! மத்தியதரைப் பிரதேசத்தில் பதட்டநிலை. மேற்கு ஆசியாவில் பதட்ட நிலை. இந்துசமுத்திரப் பிரதேசத்தில் பதட்டநிலை. மிகவும் தாக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டாலன்றி, வியாபிக்கும் இப்பதட்ட நிலையை நீக்கவும், சமாதானத்திற்காகப் போராடும் முன்னேற்றச் சக்திகளுக்கு நிபந்தனையற்ற முழு ஒத்துழைப்பையும் உதவினாலன்றி, ஒரு மூன்றாவது உலக யுத்தம் எமது வாயிற்படியை எந்நேரமும் வந்தடையலாம்.

"நான் இங்கு பேசிய பதட்ட நிலைக்கான பிரதான காரணங்களில் ஒன்று, ஏகாதிபத்தியத் தளங்களின் தோற்றமும், ஒவ்வொரு கடற்பிராந்தியத்திலும் நிகழும் போர்க்கப்பல்களின் ஆக்கிரமிப்பு [illegible] தளங்கள் அளிக்கப்பட்டாலன்றி இவ்வாக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டாலன்றி, இதன்மீது தொங்கிக் கொண்டிருக்கும் அணு நாசப் பயமுறுத்தலிலிருந்து மனித வர்க்கத்தை விடுவிக்கமுடியாது.

"இந்துசமுத்திரப் பிராந்தியத்திலிருந்து நான் வருகிறேன். எனது பிராந்திய மக்களின் சார்பில், இப்பிரதேசத்திலுள்ள சகல இராணுவ நடவடிக்கைகளும் ஒவ்வோர் இராணுவத் தளமும் ஒழிக்கப்படவேண்டுமென நான் உரிமையோடு கோருகிறேன்.

"விபத்துக்கள் நிகழ்ந்திருக்கலாம். நிகழலாம். ஒரு பொத்தானை அழுத்திவிடுவதன் மூலம் ஒரு அணு யுத்தத்தையே தோற்றுவித்துவிட முடியும்.

"எந்த ஒரு நாட்டிலும் ஓர் ஏகாதிபத்திய தளத்தின் தோற்றம் அந்நாட்டின் இறைமைக்கு மாத்திரமல்ல, அப்பிராந்திய நாடுகள் அனைத்தினது இறைமைக்குமே ஒரு பயமுறுத்தலாகும். அநேகமாக இந்துசமுத்திர பகுதியின் கரையோர, கரையை அண்மித்த நாடுகள் அனைத்துமே நூற்றாண்டு காலங்களாக அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் இருந்தன. அவற்றின் செல்வம் சூறையாடப்பட்டு, தம்மை ஆக்கிரமித்துக் கொண்ட ஏகாதிபத்திய சக்திகளின் பொருளாதார வழிப்படுத்தலுக்கு அவை உள்ளாயின. இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாகத்தான் நீண்டகால போராட்டத்தின் பின் தமது அரசியல் சுதந்திரத்தை இந்த குடியேற்ற நாடுகள் மீளப் பெற்றன. அவை இன்னமும் பொருளாதார சுதந்திரத்தை நிலைநாட்டவில்லை. இந்நாடுகள் தமது பொருளாதார சுதந்திரத்தை நிலைநாட்டவும், தமது மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யவும் உலகில் அமைதியும் பாதுகாப்பும் அவசியமானதாகும். இந்துசமுத்திரப் பிரதேசத்தினதும் ஏனைய பகுதிகளினதும் நாடுகளின் மேல் மயிரிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் வாளைப் போன்ற ஏகாதிபத்திய தளங்கள் ஒழிக்கப்பட்டாலொழிய பதட்ட நிலையினைத் தடுப்பதோ அமைதியை ஏற்படுத்துவதோ இயலாததாகும்.

"இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காதான் இந்துசமுத்திர பிரதேசத்தை ஓர் அமைதி வலயமாக ஆக்க வேண்டும் என்ற கருத்தை முதலில் முன்வைத்தவர். அப்பிரதேச நாடுகள் அனைத்தும் அவரது பிரேரணையை மகிழ்ச்சியோடு வரவேற்றன. ஏகாதிபத்திய சுரண்டலால் தகர்க்கப்பட்ட தமது பொருளாதாரத்தை இப்பிராந்திய நாடுகள் மீளமைப்புச் செய்ய இப்பிரதேசத்தில் அமைதியை அவர் விரும்பினார். திருமதி பண்டாரநாயக்காவின் பிரேரணை அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாட்டிலும், ஐக்கியநாடுகள் சபையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பிரதேச நாடுகளின் எண்ணங்களுடன் தொடர்பற்ற விதத்தில், இப்பிரேரணையை அமுல் படுத்துவதற்கப்பால் ஏகாதிபத்திய சக்திகள் இப்பிராந்தியத்தில் தங்கள் இராணுவத் தளங்களை மேலும் அமைப்பதிலும், வலுப்படுத்துவதிலும் நேரடியாகவும் சுறுசுறுப்பாகவும் ஈடுபட்டுவருவது மனித குலத்துக்கு ஏற்பட்ட பெரும் நெருக்கடியாகும்.

உலகில் என்றும் அமைதி நிலவத்தக்க விதத்தில், இந்து சமுத்திர பிரதேசத்திலும், மத்தியதரைப் பிரதேசத்திலுமான தளங்களை அகற்றியொழிக்க ஏகாதிபத்திய சக்திகளிடம் இம்மாநாடு அழைப்பு விடுக்கவேண்டும். (உ)

## நாடும் நடப்பும்

'பரதனின் வாரிசுகள் வர வர மோசமாப் போய்ற்றுது' என்று சொல்லிக்கொண்டே ஒரு நண்பர் வந்தார்.

'என்ன தொணதொணத்தபடியே வருகிறீர்கள்?' என்றேன்.

'புதுவருஷம் பிறந்து நல்ல நாள், நேரம்பார்த்து வேலைக்குக் காலையில் புறப்பட்டேன். எனக்குக் காலம் நல்லாயில்லையென்று புதுவருஷப் பலன் சொல்லுது. வேலைக்குப்போவதற்குமுன் சுவாமி தரிசனம் செய்யலாமென்று கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனம் செய்து பிரசாதமும் பெற்றுக்கொண்டு திரும்பி வந்து நான் கழற்றிவிட்ட இடத்தில் எனது செருப்பை மாட்டச் சென்றேன். செருப்பைக் காணவில்லை. அந்த இடம் முழுவதும் தேடினேன் அதைக் காணவில்லை. மற்றொரு பெண்மணியும் தனது செருப்பைக் காணவில்லையென்று தேடிக்கொண்டிருந்தார். இறுதியில் இருவரும் தேடுதல் படலத்தைக் கைவிட்டுச்சென்றோம்' என்றார் நண்பர்.

'எந்தக் கோயிலுக்குப் போனீர்கள்?' என்றேன்.

'அதுதானே ஐயா முதலிலேயே சொன்னேனே! பரதனின் வாரிசுகள் மோசமாய் போய்ற்றுது என்று. பரதனின் வாரிசுகள் எங்கே இருக்கும்? பெருமாள் கோயிலில்தானே!' என்றார் நண்பர்.

'நல்ல காலம் அனுமார் படைகள் என்று சொல்லாமல் விட்டீரே. கோயில்களில் மட்டுமல்ல கல்யாணவீடு, இழப்பு வீடுகளில்கூட செருப்புக் களவெடுக்கும் கூட்டம் இப்போது அதிகம்தான்' என்று அவருக்கு ஆறுதல் சொன்னேன்.

'பரதன் பாதுகையைக் கேட்டு பெற்றுப் பயபக்தியோடு தலைமேல் சுமந்துசென்றான். இதுகள் காத்திருந்து கண்ணுக்குத் தெரியாமலே கொண்டுபோய்விடுகுதுகளே' என்றார் நண்பர்.

'கோயிலுக்குச் செருப்புப் போட்டுக்கொண்டு போகலாமா?' என்று ஒரு கேள்வியைப் போட்டு நண்பரை மடக்க முயன்றேன். அவர் சிறிது அமைதியடைந்தார்.

சில வருடங்களுக்கு முன்னால் திருக்கோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றிலும் பலரும் கலந்துகொண்டனர். அங்கும் பாதுகைகள் பல திருட்டுப் போய்க்கொண்டிருந்தன. அச்சமயம் எம். பிக்களாக இருந்த இருவரின் பாதுகைகளும்கூடத் திருட்டுப்போய்விட்டன.

தமது பாதுகையைப் பறிகொடுத்த ஒருவர் விஷயம் தெரியாமல் ஒருஎம். பியிடம் சென்று 'பாருங்கள் சொப்பை வாசலில் கழற்றிவிட்டுச் சாப்பிடச் சென்றேன். திரும்பி வந்து பார்த்தால் அதைக் காணவில்லை' என்றார்.

இதைக்கேட்ட எம். பிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. 'என்னுடைய பகச் செருப்பை [illegible] கொண்டு

(7-ம் பக்கம் பார்க்க

# இந்தியப் பிரயாணிகளிடம் பணத்துடன்சூட்கேஸ்அபேஸ்

(நமது மன்னார் நிருபர்)

(மன்னார்)

இந்தியா செல்லவந்த பிரயாணி ஒருவர் தலைமன்னார் பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற சமயம் 5000 ரூபா பணத்தைக் கோட்டைவிட்டார்.

இச் சம்பவம் தலை மன்னார் பியரியல் நடைபெற்றது. வெளியூரைச்சேர்ந்த பிரயாணி ஒருவர் இந்தியா செல்லவென தலைமன்னார் பியர் பஸ் நிலையத்தில் நின்றசமயம் 5000 ரூபாவையும் பாஸ்போர்ட் மற்றும் தஸ்தாவேஜுகளையும் கொண்ட சூட்கேசைத் தவறவிட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## மிளகாய்த் தூள் வீசி கொள்ளை

(மன்னார்)

நானாட்டானில் வீதியால் நடந்து சென்றவர்களை மிளகாய்த்தூள் வீசித்தாக்கி விட்டுப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன

இலந்தை மோட்டையைச் சேர்ந்த இருவர் மாதோட்டம் ரயில் நிலையத்திலிருந்து இரவு நேரம் நடந்து செல்லுகையில் இடைவழியில் கொள்ளைக் கோஷ்டி ஒன்றினால் மிளகாய்த் தூள் வீசி தாக்கப்பட்டனர். அதன்பின் இருவரிடமும் இருந்தபணத்தையும் பொருட்களையும் கொள்ளைக் கோஷ்டி பறித்துக் கொண்டு ஓடி மறைந்துவிட்டது. இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 3 சந்தேகநபர்களைப் பொலிசார் விசாரணைக்குட்படுத்தினர்.

## பனம்பொருள் உற்பத்திகளுக்குக் கிராக்கி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பனம் பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பெட்டி,பாய்,சுளகு போன்ற பொருட்களை வெளியூர்களில் இருந்து வருபவர்கள் கொள்வனவு செய்துவருகின்றனர் சிலர் மூற்பணம் செலுத்தியும் இப்பொருட்களைக் கொள்வனவு செய்துவருகின்றனர். இதனால் பனம்பொருள் கைப்பப்பணி நிலையமொன்றை அமைத்து உற்பத்தியைப் பெருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

## மெட்ரிக்அளவு முறைப் பயிற்சி வகுப்பு

(மன்னார்)

இவ்வருடம் ஐப்பசி மாதம் முதல் மெட்ரிக் அளவுமுறை நடைமுறைக்கு வர இருப்பதால் தற்போது மெட்ரிக் அளவு முறைப்பயிற்சி வகுப்புகளை மன்னார் மாவட்ட நிறுத்தலளவைப்பரிசோதகர் திரு டி.யோகநாதன் நடத்தி வருகிறார்

## எரிகாயங்களுடன் சிறுமி

(மன்னார்)

தினமும்குடிவெறியில் வீட்டிற்கு வந்து சிறியதாயாருடன் சண்டையிடும் தந்தைக்குப் பாடம் புகட்டுவதற்காக தனக்குத்தானே தீமூட்டித் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் 13 வயதுச்சிறுமி.

இச்சம்பவம் தலைமன்னார் பியரியரில் இடம்பெற்றது. எரிகாயங்களுக்குட்பட்ட இச் சிறுமி தலை மன்னார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்.

## கமநலச்சேவை சபைத் தேர்தல்கள்

(மன்னார்

மன்னார் மாவட்டத்தில் 10 கமநலசேவை சபைகளுக்கு 60 விவசாயிகள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்

ஒவ்வொரு சபையும் 14 உறுப்பினர்களைக் கொண்டு இருக்கும் 8 உறுப்பினர்கள் கமநலச் சேவை அமைச்சினால் நியமிக்கப்படுவர். மீகுதி 6 பேரும் விவசாயிகளால் தெரிவு செய்யப்படுவர்மீகளால் சான தேர்தல்கள் தற்போது நடைபெற்றுவருகின்றன. கமநலச்சேவை மாவட்ட அதிகாரி தேர்தலை நடத்திவருகிறார்.

## துணிவிணைப்படை

(மன்னார்)

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட துணிவிணைப் படை எருக்கலம்பிட்டி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் சிறந்த முறையில் செயலாற்றிவருவதுடன்சிரமதானத் திட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 'எருக்கலம்பிட்டி மீனவருக்கு வீட்டுத்திட்டம் வேண்டும்'

(மன்னார்)

எருக்கலம்பிட்டியில் வசித்து வரும் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு ஒருவீட்டுத்திட்டம் அமைக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று எருக்கலம்பிட்டிக் கடல் தொழிலாளர் விரிவாக்கச் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## மன்னார்ச் செய்திகள்

### பட்டமளிப்புவிழா

(மன்னார்)

முதல் உதவிப் படையின் முதல் பரீட்சையில் சித்தியடைந்த எருக்கலம்பிட்டி அரசினர் மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்குப் பட்டமளிக்கும் விழா மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ஜனாப் எம். கே. எச். முகம்மது தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மன்னார்மாவட்ட முதலுதவிப் படை ஆணையாளர் திரு. ஏ. ராஜசிங்கம், கலாநிதி ரூபேட் குருஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

ஆசிரியர் ஜனாப் எம். றசீது நவஷாத் சாஹறாப்தீனும் உரையாற்றினார்.

### 600 ரூபா அபராதம்

(மன்னார்)

மன்னார் பஸ்நிலையத்தில் மூன்று பொதிகளினுள் 14 டைனமட் வைத்திருந்த மன்னார்ப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பாலசூரியாவும், கான்ஸ்டபிள் ஜனாப் யூசுபும் கைதுசெய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் மீது மன்னார்ப் பொலிசார் வழக்குத் தாக்கல்செய்திருந்தனர்.

விசாரணையின்போது சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மன்னார் பதில் நீதவான் சந்தேகநபருக்கு 600 ரூபா அபராதம் விதித்தார்.

### புலமைப்பரிசிலில் அவுஸ்திரேலியா பயணம்

(மன்னார்)

எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இலங்கை தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய பொறியியலாளரான ஜனாப் ஐ ஜவாஹிர் சிட்னி நகரிலுள்ள உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாகிய நியு சவுத் வேல்ஸ் பல்கலைக் கழகத்தில், அவுஸ்திரேலிய அரசு வழங்கிய புலமைப் பரிசில் பெற்று, உபகரண இயந்திரவியல் துறையில் 2 வருட கால பட்டப்படிப்புப் பெறுவதற்கென அவுஸ்திரேலியா பயணமானார்.

சோவியத் அரசு வழங்கிய புலமைப் பரிசில் பெற்று மாஸ்கோ லுமும்பா சர்வகலாசாலையில் எம். எஸ். ஸி. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறி 1975-ம் ஆண்டு தாயகம் திரும்பிய இவர் தேசிய கடதாசிக் கூட்டு தாபன பொறியியலாளராகக் கடமையாற்றியவர். அத்துடன் பிரான்ஸ்-இலங்கை தொழில் நுட்பவியலாளர் சங்கத்தின் உறுப்பினராக 5 வருடகாலம் இருந்தார். சோஷலிச நாடுகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் சங்கத்தின் கல்விப் பிரிவுச் செயலாளராக 3 வருடங்கள் இவர் கடமையாற்றினார்.

### கசிப்புக்கடத்தியவருக்கு ரூ. 1000 அபராதம்

(மன்னார்)

வெள்ளப்புவ என்னுமிடத்திலிருந்து கசிப்பு கடத்திவந்து மன்னாரில் பொலிசாரிடம் அகப்பட்ட நபர் 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

கொழும்பில் இருந்து தலைமன்னார் வந்த பஸ்சில் வென்னப்புவ வாசியொருவர் 45 போத்தல் கசிப்பை பொதியினுள் வைத்து பஸ்ஸின் மேல் வைத்துக் கொண்டு வந்தார். பஸ் மன்னார் பஸ்நிலையத்தில் தரித்து நின்றபோது கடமையில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள் திரு. துரைராசசிங்கம், ஜனாப் யூசுப் ஆகிய இரு பொலிசாரும் பஸ்சின் மேல் இருந்த பொதியைச் சோதனையிட்டபோது 45 போத்தல் கசிப்பு அகப்பட்டது.

சந்தேகநபரை பொலிசார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது மன்னார் பதில் நீதவான் 1000 ரூ. அபராதம் விதித்தார்.

# "கட்டுப்பாடற்ற சுயநிர்ணய உரிமை எமக்கு வேண்டும்"

## அரியாலைக்கருத்தரங்கில் 'அமிர்'

(அரியாலை)

''நாட்டில் தினமும் ஏற்பட்டுவரும் விலைவாசிஉயர்வை எதிர்த்தும், வறிய மக்களுக்கு உதவிவந்த கூப்பன்கள் படிப்படியாக மக்களிடமிருந்து பறிக்கப்படுவதை எதிர்த்தும் நாடு முழுவதும் பரந்தஅளவில் மாபெரும் போராட்டம் நடத்த தொழிற்சங்கங்கள் ஏற்பாடுசெய்துவருகின்றன இப்போராட்டத்தினால் ஏற்படும் விளைவுகளை மிகவும் நுணுக்கமாய் ஆராய்ந்துவரும் எமது இயக்கமும் அவர்களோடு இணைந்து ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தத் தயாராகிவருகிறது தமிழ் மக்களும் இந்த நாட்டின் தேசியஇனம் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிற நிலை இன்று ஏற்பட்டுவருகிறது. சோவியத்நாடு கூட தமிழ் மக்களை இலங்கையின் ஒரு தேசியஇனம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறது அணிசேரா இயக்கமும் தமிழ்மக்கள் இலங்கையில் வாழும் தேசிய இனங்களில் ஒன்று என்று ஏற்றுக்கொள்ளுகிற நிலை ஏற்பட்டுவருகிறது. கட்டுப்பாடற்ற சுயநிர்ணய உரிமையே எமக்கு வேண்டும்''

இவ்வாறு அரியாலை மேற்கில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழர்விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமும், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ அமிர்தலிங்கம் பேசகையில் குறிப்பிட்டார்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக மாணவன் சி சந்திரமோகன் தலைமையில் ''இன்றைய தமிழர் நிலை'' என்ற தலைப்பில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

### பிரிவினை முயற்சி

தமிழர் விடுதலைக் கூட்டணி சரியான பாதையில் தான் சென்றுகொண்டிருக்கிறது. எம்மையும் மக்களையும் பிரிப்பதற்கான சூழப்பநிலையை எம்மவர்கள் ஏற்படுத்திவருகிறார்கள். இவர்களை இனங்கண்டு மக்களுக்கு அம்பலப்படுத்தவேண்டிய காலகட்டத்தில் நாம் இன்று வந்திருக்கிறோம். இந்த நாட்டில் பிரித்தானிய அரசாங்கத்தால் காலத்துக்குக்காலம் அனுப்பப்பட்ட டொனமூர், சோல்பரி ஆணைக்குழுக்களால் சிங்கள மக்கள் பெரு நன்மைகள் அடைந்தனர் இவைகளின் மூலம் ஆட்சிபமைப்பில் பெரிய அதிகாரங்களைப் பெற்றனர். ஆனால் தமிழ்மக்களுக்கு எந்த விதமான நன்மைகளும் ஏற்படவில்லை.

### நம்மை நோக்கி சர்வதேச சூழ்நிலை

எமது இலட்சியத்தைப் பொறுத்தமட்டில் எதுவித வேறுபாடுமில்லை. நாம் ஒவ்வொருவரும் இயக்கத்தின் பங்காளர் என்ற உணர்வோடு இயக்கத்துக்காக உழைக்க வேண்டும். சர்வதேசசூழ்நிலை நம்மைநோக்கி வந்தகொண்டிருக்கிறது. உள்நாட்டுச் சூழ்நிலையும் எமக்கு வாய்ப்பாக வந்துகொண்டிருக்கிறது. அதனை ஏற்ற சூழ்நிலையில் தமிழ்மக்களின் விடுதலைக்காக தமிழ் மக்கள் எமக்குக் கொடுத்த உத்தரவாதத்துக்கமைய நாம் செயல்படத் தவறமாட்டோம். நாம் எதைச் செய்தாலும் பொதுச்சபையினதும் செயற்குழுவினதும் பொதுத்தீர்மானத்துக்கமையவே செய்துவருகிறோம். நான் என்மீது தமிழ்மக்கள் சுமத்திய பொறுப்பை உணர்ந்தே செயல்பட்டுவருகிறேன் போராட்டத்தை நடாத்தத் திடசங்கற்பம்செய்து தம்மையே அதற்கு அர்ப்பணித்தவர்கள் மேடைகளில் தமது தலைவர்களைத் தாக்கிப் பேசாது மிகவு அமைதியாகச் செயல்பட்டு வருகிறார்கள். தலைவர்களையும் அவர்களது போக்குகளையும் மேடைக்கு மேடை கண்டித்துப் பேசுவதினால் போராட்டத்தை நடாத்தமுடியாதென்பதை நம்மவர்கள் இன்னும் தெரிந்துகொள்கிறார்களில்லை.

### மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு யாருக்கு?

''தேரோ ஒருவர் வடபகுதியில் தாக்கப்பட்டார் என்ற செய்தி தென்னிலங்கையில் மிகவும் வேகமாகப் பரப்பப்பட்டது இதனால் 1979ம் ஆண்டு ஆடி மாதம் தென்னிலங்கையில் இனக்கலவரத்துக்கான தூபம் போடப்பட்டது. தென்னிலங்கையில் ஒரு பதட்டநிலை ஏற்பட்டது. தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இப்படியாகத் தொல்லைகள் ஏற்படவிருந்த நேரத்தில் மக்களை அதினின்று காப்பற்ற நானும், எமது இயக்கத் தலைவர் திரு. எம் சிவசிதம்பரமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பிலும், பிரதம மந்திரியும், ஜனாதிபதியும் அரசாங்கத்தின் சார்பிலும் நீண்டநேரம் செய்த ஆலோசனையின் பின்னர் கையொப்பமிட்டு ஒரு அறிக்கையைவிடச் சம்மதித்தோம். இதில் என்ன தவறு ஏற்பட்டது. மக்களைக் காப்பாற்றும்பொறுப்பு மக்கள் தலைவர்களிடம் இருக்கிறதென்பதை எம்மீது கண்டனம் தெரிவிப்பவர்கள் உணர்ந்துகொள்கிறார்களில்லை. எம்மீது எம்மவர்களே வசைமாரி பொழிகிறார்கள். இது இயக்கத்தின் கொள்கைகளைக்கடைபிடிக்கும முறையா?

### வசைமாரி பொழிபவர்கள் அறியட்டும்

வவனியாப்பகுதியில் 3 அரசாங்க அதிபர் பிரிவுகளை ஒன்றிணைத்துச் சிங்களப்பிரிவாக அமைக்க இரவோடு இரவாக சட்டம் கொண்டுவந்த பொழுது நாம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் எமது எதிர்ப்பைக்காட்டினோம் பாராளுமன்றத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தோம். பாராமன்றக் கூட்டத்தொடரைப் பகிஷ்கரித்தோம் நடந்தது என்ன' ஜனாதிபதி கூட்டணியின் பாராளுமன்றக் குழுவை அழைத்துப்பேசினார். சமரசம் செய்ய முற்பட்டார், எமது கோரிக்கைக்கும் செவிமடுத்தார், அவசரமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கடந்த 9மாதங்களாகச் செயலபடாமல் இருக்கிரது எம்மீது வசைமாரி பொழிபவர்கள் எம்மைப்பார்த்து இதுவரை என்ன செய்தீர்கள் என்று கேட்பவர்கள் இவைகளை அறிவார்களா?

### காலநிலையை அறிய வேண்டும்

''நாம் போராட்டத்தை நடாத்தத்தயங்குகிறோமென்று எம்மீது வசைமாரி பொழிபவர்கள் காலம் இருக்கும் நிலையையும் - மாற்றானின் பலத்தையும் அறிய மறுக்கிறார்கள். நாம் தமிழ் ஸ்ரீ போராட்டம் நடத்திய பொழுது நாடு இருந்த நிலையும் இன்று இருக்கும் நிலையும் வேறானது என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்

1977-ம் ஆண்டு ஆவணி மாதம் யாழ்ப்பாண மாநகரத்தில் கடைகள் தீயிடப்பட்ட வேளையில் நானும் தம்பி யோகேஸ்வரனும் திருவாளர்கள் தர்மலிங்கம், நாகராசா ஆகியோரும் நிலைமையை நேரில் அவதானிக்க அப்பகுதிக்கு விரைந்தபொழுது எம்மை நோக்கி அங்கு பாதுகாப்புக்கு நின்ற பொலிஸார்கூட எத்தனம் செய்தார்கள்ஒருபொலிஸ் அதிகாரி அதனைத் தடுத்தார். ஒருவன் பொலிசார் மீது செருப்பை வீசிய பொழுது செருப்பு வீசியவனை நோக்கிப் பொலிசார் சுட்டனர் இப்படியான நிலைமையில் போராட்டத்தை நடத்த முடியுமா? இப்போராட்டத்தால் வெற்றி பெறமுடியுமா?

''இயக்க உறுப்பினர்கள் இன்றுள்ள நிலைமைகளையும் பிரச்னைகளையும் பற்றிச் சிந்திப்பது மிகவும் குறைவாக இருக்கிறது இது பெரும் சாபக்கேடாகும். எந்த இயக்கத்திலும் கருத்து மோதல்களும் கருத்துவித்தியாசங்களும் இல்லாமலில்லை. மக்களும் எத்தனையோ கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். நாம் ஒன்றுபட்ட கருத்தை ஏற்றுக்கொண்டு நடப்பதுதான் இயக்கமாகும். இயக்கத்தையும் அதன் கொள்கைகளையும் காலத்துக்குக் காலம் விட்டுச்சென்றவர்கள் தனி இயக்கம் வைத்தும் அதனையும் அழித்துத் தம்மையும் அழித்துக்கொண்டனர். தந்தை செல்வாவோடு இணைந்து இயக்கத்தை வளர்த்தவர்களில் பலர் இயக்கத்தை விட்டுச் சென்றதுடன், தந்தையோடும் மோதவும் முற்பட்டனர்.

### இயக்கமுடிவை மீறினால்...

''1962ம் ஆண்டு மன்னார் மகாநாட்டில் எடுத்த முடிவை ஏற்கமுடியாதென்று பத்திரிகையில் திரு. வ. நவரத்தினம் அறிக்கை வெளியிட்டார். கருத்துவேறுபாடு ஏற்பட்ட பொழுது அதனைப் பற்றி இயக்கத்தின் செயற்குழுவில் கேட்டிருக்கலாம் அக்கருத்து மோதலுக்குத்தீர்வு கண்டிருக்கலாம். அதனை விடுத்துத் தானாகவே ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். அந்த இயக்கத்தின் முடிவு என்ன? இயக்கப் பொது முடிவை மீறி நடப்பவர்களுக்கு இந்த நிலைமை நிச்சயமாக ஏற்படும்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட விடுதலைப் பயணத்தின்பின் இன்றுசுதந்திரம்காணும் ஸிம்பாப்வே

நீண்டதொரு விடுதலைப் பயணத்தில் பெரும் நெருக்கடிகளையும், போராட்டங்களையும் முறியடித்துப் பல்லாயிரம் உயிர்களைப் பலி கொடுத்து இறுதியில் வெற்றி கொண்ட ரொடீஷிய மக்களின் கனவு இன்று நனவாகிறது.

பிரிட்டனின் குடியேற்ற நாடான ரொடீஷியா, ஸிம்பாபே என்ற பெயருடன் இன்று விடுதலைபெற்றுச் சுதந்திர நாடாகிறது.

சிறுபான்மை வெள்ளையரின் இனவெறி ஆட்சியில் ஸிம்பாவே மக்கள் மனிதாபிமான மற்ற முறையில் சித்திரவதைக்குள்ளாகினர்.

சொந்த மண்ணில் அவர்களுக்குச் சுதந்திரமில்லை— உரிமைகள் இல்லை— நாய்களிலும் கேவலமாக மதிக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே விடுதலைத் தீ அம்மக்களிடையே சுடர் விட்டுக் காலப்போக்கில் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

வெள்ளையரின் இனவெறி ஆட்சிக்கு எதிராக தேசாபிமானத் தலைவர்களான திரு. ரொபேர்ட் முகாபே, திரு. ஜோசுவா என்கோமா ஆகிய இருவரது தலைமையின் விடுதலை காணத் துடித்த மக்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

## ஆயுதப் போராட்டம்

மௌனமாக இருந்துவிட அம்மக்கள் பேசாதிருந்துவிடவில்லை. ஆயுதம் தாங்கி அரசப் படைகளை எதிர்த்துச் சமரிட்டனர்.

## 7 ஆண்டுகள் கொரில்லாச் சண்டை

காடுகளிலும், மலைகள், ள்ளத்தாக்குகளிலும் மறைந்திருந்து அரசாங்கப் படைகளுடன் விடுதலைப் படைகள் நடத்திய போராட்டம் ஓரிரு ஆண்டுகளுடன் முடிந்துவிடவில்லை.

ஏழு ஆண்டுகள் நடைபெற்ற இந்தக் கொரில்லாப் போர் 20 ஆயிரம் பேரின் உயிரைக் குடித்தது. பெருந்தொகைப் பணத்தையும், சொத்துக்களையும் இழக்கச் செய்தது.

பிரிட்டனின் ஆபிரிக்க குடியேற்றநாடான ஸிம்பாவே இன்று சுதந்திரமடைகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

உலக நாடுகள் பலவற்றின் ஆதரவு இவர்களுக்குக் கிடைத்தபோதிலும் இனவெறி ஆட்சியின் அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இவர்களது விடுதலைப் போராட்டமும் தணியவில்லை.

இந்நிலையில் விடுதலை வீரர்கள் சளைக்காமல் நடத்தி வந்த போராட்டத்தை அன்றைய பிரதமர் திரு. இயன் சிமித்தினால் எதிர்கொள்ள முடியவில்லை.

''நான் உயிருடன் இருக்கும்வரை ரொடீஷியாவில் பெரும்பான்மைக் கறுப்பு இன மக்களினால் ஆட்சிநடத்தமுடியாது'' என்று அடிக்கடி கூறி வந்த இயன் சிமித், தமது எண்ணத்தை மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இறுதியில் 1978ம் ஆண்டு தேசாபிமானத் தலைவர்களில் ஒருவரான ஸிம்ப்பாவே ஆபிரிக்க முன்னணித் தலைவர் திரு. ஜோசுவா என்கோமாவுடனும் ஸாம்பிய அதிபர் டாக்டர் கௌத் கௌண்டாவுடனும் திரு. சிமித் பேச்சு நடத்தியதன் பயனுகக் கடந்த ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற தேர்தலில் பிஷப் முஸறேவா ரொடீஷியப் பிரதமரானுர்.

## -- காணு --

பிஷப் முஸறேவாவின் பொம்மை அரசினால் எதுவும் சாதிக்கமுடியவில்லை. கறுப்பு இன மக்களில் பெரும்பான்மையினரே இந்த அரசை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. முகாபேயையும் அவரது ஆதரவாளர்களையும் இந்தப் பொம்மை அரசு திருப்திப்படுத்தவில்லை. திரு. சிமித்தின் ஏமாற்றுவேலை பயன்தரவில்லை.

## பிரிட்டிஷ் அரசு நடவடிக்கை

விடுதலைப் போராட்டம் மேலும் மேலும் தீவிரமாகியதே தவிரத் தணியும் அறிகுறிகூட இல்லை.

முதலில் பிரிட்டிஷ் அரசு கூட்டிய லண்டன் மகாநாட்டில் இயக்கப் பிரதிநிதிகளோடு திரு. இயன் சிமித் முதலியோரும் பிரிட்டிஷ் அதிகாரிகளையும் கொண்ட மாநாட்டில் ரொடீஷியாவில் பொதுத் தேர்தல் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## வெள்ளையருக்கு 20 ஆசனங்கள்

அடுத்து கடந்த பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 100 ஆசனங்கள் கொண்ட ஆட்சிமன்றத்தில் பெரும்பான்மைக் கறுப்பு இன மக்களுக்கு 70 தொகுதிகளும், 20 ஆசனங்கள் வெள்ளையர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன.

தேர்தலில் திரு ரொபேட் முகாபேயின் ஸிம்ப்பாவே ஆபிரிக்கத் தேசிய யூனியனுக்கு 57 ஆசனங்களும், திரு. ஜோசுவா என்கோமாவின் ஸிம்ப்பாவே ஆபிரிக்க மக்கள் யூனியனுக்கு 20 ஆசனங்களும் முன்னாள் பிரதமர் பிஷப் முஸறேவாவுக்கு 8 ஸ்தானங்களும் கிடைத்தன.

புதிய அரசாங்கத்தில் இரு விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் அங்கம்வகிக்கின்றனர்.

சுதந்திரம் பெறும் ஸிம்ப்பாவேயின் புதிய அரசு திரு. ரொபேட் முகாபே தலைமையில் இன்று பதவியேற்கிறது.

## ஸிம்பாப்வே பற்றிய சில குறிப்புகள்

ஸிம்பாப்வேயின் சனத்தொகை 65 லட்சத்து 30 ஆயிரமாகும் (1976-ம் ஆண்டின் குடிசன மதிப்புப்படி) சாலிஸ் பரியைத்தலைநகராகக் கொண்ட இந்நாட்டின் சனத்தொகையில் 96 சதவிகிதமானவர் பான்ரு இன பழம் குடிகளாவர். ஒரு சதவிகிதமான ஆசியா மக்களும் இங்கு வாழ்கிறார்கள். இங்கு வாழும் மக்களில் 75 சதவிகிதமானோர் கிறிஸ்தவர்கள் முஸ்லீம்கள் அடுத்த சனத்தொகையினராக உள்ளனர்.

இதன் அயல்நாடுகளாக ஸாம்பியா பொஸ்வானு மொசாம்பிக் போன்றவை காணப்படுகின்றன கிழக்குக் கரையோரமாக மலைத்தொடர்கள் உள்ளன.

கப்பல்கட்டுதல் புகையிலைத் தொழில், பட்பாண்டம் செய்தல், கடதாசிஉற்பத்தி, கண்ணாடி உற்பத்தி, உல்லாசத்துறை போன்ற கைத்தொழில்கள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

புகையிலை, பருத்தி, கரும்பு, தேயிலை போன்ற பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வெள்ளி, இரும்பு, நிலக்கரி செம்பு போன்ற கனிப்பொருள் வளங்களும் இங்கு காணப்படுகின்றன இங்குள்ள தொழிலாளர்களில் 63 சதவிகிதமானோர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஸிம்பாப்வேயின் நாணயம் ''டாலர்'' என அழைக்கப்படுகின்றது இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பிரிட்டன், ஸாம்பியா மேற்கு ஜெர்மன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன

மொத்த சனத்தொகையில் சுமார் அரைவாசிப்பேர் ஆண்களாவர் இங்குள்ள மக்களில் 25 சதவிகிதமானோரே கல்வி அறிவுள்ளவர்கள்.

தென்ரொடீஷியாவை 1923ம் ஆண்டில் தென்னுபிரிக்கா விடமிருந்து பிரித்தானியர் கைப்பற்றினர் 1961-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புத்திட்டத்தின் பிரகாரம் வெள்ளையர்களை ஆட்கொண்டுவரும்வகையில் வாக்களிக்கும் உரிமை கட்டுப்படுத்தப்பட்டது பிரதமர் திரு இயன் சிமித் 1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் திகதி ரொடீஷியாவை சுயாட்சியுள்ள சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தார்.

திரு. இயன் சிமித்தின் இந் நடவடிக்கையை பிரிட்டன் சட்ட விரோதமானதெனக் கண்டித்தது பெரும்பான்மையினரான ஆபிரிக்கர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவேண்டுமெனப் பிரிட்டன் கேட்டுக்கொண்டது. பிரிட்டனுடன் இணைந்து படைப்பலத்தைப் பிரயோகிக்கப்போவதாக சில ஆபிரிக்க நாடுகள் ரொடீஷியாவைப் பயமுறுத்தி வந்தன. பிரித்தானியாவிற்கும் ரொடீஷியாவிற்கும் இடையே இடம் பெற்ற சமாதான உடன்படிக்கையை, பெரும்பான்மையான கறுப்பு இனத்தவர்கள் எதிர்த்தமையால், அது 1972 மே மாதம் கைவிடப்பட்டது.

1977 ம் ஆண்டு மே நடுப் பகுதியில் மொசாம்பிக்குடன் நடைபெற்ற யுத்தத்தில் 3,000 க்கு மேற்பட்ட படை வீரர்கள் ரொடீஷியத் துருப்புக்களினால் கொல்லப்பட்டனர்.

## கட்டுப்பாடற்ற...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### தந்தை செல்வாவை எதிர்த்தோம் முடிவு....

''பண்டா—செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட பொழுது நாம் எல்லோரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த வேளையில் பண்டாரநாயக்கா அமைக்கவிருந்த செயற்குழுவில் நாம் இடம் பெறுவதா விடுவதா என்பதில் எம்மிடையே கருத்துமோதல் ஏற்பட்டது. செயற்குழுவில் நாம் இடம்பெறவேண்டுமென்று தந்தை செல்வா, அமரர்கள் நாகநாதன், இராசவரோதயம் ஆகியோர் கருத்துக்கொண்டிருந்த நேரத்தில் நானும் அமரர் வன்னியசிங்கமும் இன்னும் சில இளைஞர்களும் குழுவில் இடம்பெறுவது நல்லதல்ல என்று கருத்துக்கொண்டிருந்தோம். இந்த நேரத்தில் தந்தை செல்வா எம்மைப் பார்த்து என்மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா, நான் சொல்வதை நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கேட்டபொழுது நாம் தந்தையின் பணிப்புரைக்குப் பணிந்து நாம் கொண்டிருந்த கொள்கையைக் கைவிட்டு பண்டாரநாயக்கா அமைக்கும் செயற்குழுவில் நாம் இடம்பெறவேண்டுமென்று கோரும் தீர்மானத்தைத் தந்தையின் கட்டளையின்பேரில் வவுனியா மகாநாட்டில் நானே பிரேரித்து ஆதரித்துப் பேசினேன். தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டோம். இந்த வவுனியா மகாநாடு 1958-ம் ஆண்டு மே மாதம் 25-ம், 26ம் திகதிகளில் நடைபெற்றது:

### 1958

இத்தீர்மானம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டபின்னர் நாட்டில் என்ன நடைபெற்றதென்பதை நம்மீது சேறுவாரி வீசுவோர் அறியவேண்டும் பொலநறுவையிலும், தென்பகுதியிலும் பரவலாக வகுப்புக்கலவரம் ஆரம்பமானது. இதனால் தமிழ் மக்கள் பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டமும் கலவரங்

(3ம் கலத் தொடர்ச்சி)

டங்களை அடைந்ததுடன் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ்மக்கள் அகதிகளாக நாடு திரும்பினர்.

### தந்தை செல்வா கடைசியில் என்ன சொன்னர்?

''1958-ம் ஆண்டு ஆனி மாதம் 5-ந் திகதி நாம் எல்லோரும் கைது செய்யப்பட்டோம். நான் என்னைப் பாதுகாத்த பொலிசையும், எனக்குச் சாப்பாடு தந்தவரையும் தவிர வேறு எவரையும் 10 நாட்கள்வரை பார்க்கவில்லை. 10நாட்களின் பின்னர் என்னையும் அமரர்களான வன்னியசிங்கம், இராஜவரோதயம், நவலையா, திரு. செ. இராசதுரை, திரு வி. என் நவரத்தினம் ஆகியோரையும் ஒரு வீட்டில் கொண்டுபோய்த் தடுத்து வைத்தார்கள். சில நாட்களின் பின்னர் நாம் எல்லோரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டோம். அப்பொழுது தந்தை செல்வா எம்மைப் பார்த்து வவுனியா மாநாட்டில் நீங்கள் சொன்னதுதான் சரியானமுடிவு என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன் என்று கூறினர் இதுதான் தந்தை செல்வாவுக்கும் நம்பர் நவரத்தினத்திற்குமுள்ள வேறுபாடு''.

## மிருகபலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கோரிக்கையை நிராகரித்த திணைக்களம் மிருகபலித்தடை உத்தரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (இ)





ஓர்தீன் வெற்றிவீரன்

மயிர்க்கொட்டிகள், கனி துளைக்கும் பூச்சிப்புழுக்கள் உங்கள் வெங்காயம், மிளகாய், கத்தரிக்காய், கோவா போன்ற பயிர்களை நாசம் செய்கின்றனவா?

ஓர்தீன் S.P. 75 இந்தப் பூச்சிப்புழுக்களை அழித்து கூடுதலான விளைச்சலைத் தருவதோடு நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சி புழுக்களையும் அழிக்கவல்லது.

யாழ்ப்பாணம் இன்னொவெலியில் மேற்கொள்ளப்பட்ட திறன்காண் சோதனையில் சாதனையை நிலைநாட்டிய ஓர்தீன் S. P. 75 ஒரு ஹாகுறேஸ் விவசாய ரசாயனம்

எல்லா ஹாகுறேஸ் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.




ஹரிசன் அன்ட் குறேஸ்பீல்ட் (கொழும்பு) லிமிட்டெட்.

330, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "இந்திராவைக் கொல்லவே புதுடில்லி வந்தேன்"

## ராம்சந் ஒப்புக் கொள்கிறார்

புதுடில்லி, ஏப்ரல் 16
இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கொலை செய்யும் நோக்குடன் அவர் மீது கத்தியொன்றை வீசிய 37 வயது இளைஞரான ராம் சந்லால் வாணி புதுடில்லி மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது இம்மாதம் 24ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளையில் இக்கொலை முயற்சிதொடர்பாக பரோடா நகர பிரதிமேயர் உட்பட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தீவிரவாத ஹரிஜன இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவரான ராம்சந்லால் வாணியும் இந்த ஐவரும் திட்டமிட்டு இக்



## பரோடா பிரதிமேயர் உட்பட மேலும் ஐவர் கைது!

கொலைமுயற்சியை மேற்கொண்டிருக்கலாம் என பொலிசார் நம்புகின்றனர்.

இதேசமயம், புதுடில்லியில் இருந்து திருமதி இந்திரா காந்தியைக் கொலைசெய்யும் நோக்குடனேயே தாம் புதுடில்லி வந்ததாக ராம் சந்லால் பொலிசாரிடம் ஒப்புக்கொண்டுள்ளதாக புதுடில்லி பொலிஸ் கமிஷனர் தெரிவித்துள்ளார். [இ]

## கார்ட்டர், ஜே. ஆர்., ஹக், பிரஷ்னேவ் அதிர்ச்சி

புதுடில்லி, ஏப்ரல் 16
இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் அம்முயற்சியில் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதனால் நிம்மதியும் அடைந்ததாக உலகத் தலைவர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்ஹக், சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவ் உட்பட உலகத் தலைவர்கள் இதுகுறித்து திருமதி காந்திக்கு செய்தி அனுப்பியுள்ளனர்.

### கருணாநிதி- எம். ஜி. ஆர். கண்டனம்

தமிழகத் தலைவர்களான திருவாளர்கள் மு. கருணாநிதி, எம். ஜி. இராமச்சந்திரன், பக்தவத்சலம் ஆகியோரும் அகில இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ் உட்பட மற்றும் சிலரும் இச்செய்தி கேட்டுத் தாம் பெரிதும் அதிர்ச்சி அடைந்ததாகத் தெரிவித்தனர். [இ]

## 6 வங்கிகள் அரசுடைமை

புதுடில்லி, ஏப் 16
இந்தியாவில் உள்ள மேலும் ஆறுவங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

## குடிசைக்குள் இருந்த புற்றில் 500 பாம்புகள்

சென்னை, ஏப்ரல் 16
சேலத்தில் குடிசை ஒன்றினுள் இருந்த புற்றில் பல இனங்களைச் சேர்ந்த 500க்கும் அதிகமான பாம்புகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு நித்திரையிலிருந்த மேற்படி குடிசைவாசி தம்மீது ஏதோ ஊர்ந்துசெல்வதை உணர்ந்து எழுந்தபோது இரண்டு பாம்புகளைக் கண்டாராம். சிறிதுநேரத்தில் இரு பாம்புகளுமே அக்குடிசையின் ஒரு மூலையில் இருந்த புற்று ஒன்றுக்குள் சென்று மறைந்துவிட்டதாம்.

மறுநாள் அந்தப் புற்றை வெட்டியபோது அதற்குள் இருந்து 500க்கும் அதிகமான பல இனப் பாம்புகள் வெளிவந்தனவாம்.

இவற்றில் சுமார் 400 பாம்புகளை அங்கு நின்றவர்கள் அடித்துக்கொன்றனர் என்றும் மிகுதிப்பாம்புகள் தப்பி ஓடிவிட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஈரான் - ரஷ்ய எல்லையில் சோவியத் படைகுவிப்பு

### அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)
ஈரான் எல்லைக்குச் சமீபமாக சோவியத் யூனியன் தனது துருப்புக்களை குவித்து வருகிறது. இந்த இராணுவ நடவடிக்கை ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் யூனியன் ஊடுருவல் நடத்துவதற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டு வந்ததை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு அமெரிக்க அதிகாரிகள் பாதுகாப்பு ஆலோசகரான பிரஸன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இரண்டாவது உலக மகாயுத்தகாலத்திலும் ஈரானுக்கு சமீபமாக சோவியத் யூனியன் துருப்புக்களை நிறுத்தியிருந்தது கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியது என்றும் அவர் கூறினார். (இ)

## "எந்த நாடு பகிஷ்கரித்தாலும் ஒலிம்பிக் போட்டிகள் திட்டமிட்டபடி நடக்கும்"

### அழைப்பை 106 நாடுகள் ஏற்றன; 7 நாடுகள் நிராகரிப்பு

மாஸ்கோ, ஏப் 16
எந்த நாடு கலந்து கொள்ளாவிட்டாலும் திட்டமிட்டபடி இவ்வாண்டு ஜூலையில் சோவியத் யூனியனில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெறும்.

இவ்வாறு சோவியத் ஒலிம்பிக் போட்டி ஏற்பாடுக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஒலிம்பிக் போட்டிக்கான அழைப்பை 106 நாடுகள் இதுவரை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளன என்றும் 7 நாடுகள் அழைப்பை நிராகரித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

அழைப்பை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பது குறித்து மேமாதம் 26ம் திகதிக்கு முன் தமது குழுவுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். [இ]

## ஈரானுக்கு ஈராக் எச்சரிக்கை அவசியம் வந்தால் படைபலம் பிரயோகிக்கப்படும்

பக்தாத், ஏப்ரல் 16
"ஈரானிய மதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி தலைப்பாகைசூடிய மற்றொரு ஷா."

இவ்வாறு ஈராக் ஜனாதிபதி ஜனாப் ஹூசெய்ன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈரான் தலைவர்கள் ஈரானிய மக்களுக்கே எதிராக இயங்கிவருகிறார்கள் என்றும் மனித சமுதாயம் ஏற்றுக் கொள்ளாத பண்புகளைக் கைக்கொண்டு வருகிறார்கள் என்றும் ஜனாப் ஹூசெய்ன் தெரிவித்தார்.

அவசியம் ஏற்படும்பட்சத்தில் ஈரான் மீது படைபலத்தைப் பிரயோகிக்க ஈராக் தயங்கமாட்டாது என்றும் ஜனாப் ஹூசெய்ன் தெரிவித்தார். [இ]

## "வல்லரசுப் போட்டிகளினால் இந்து சமுத்திரப் பிரதேசத்தில் பதட்டம் ஏற்படுகிறது"

### இந்திய ஜனாதிபதி கவலை

புதுடில்லி, ஏப், 18
உலக நாடுகளிடையேயான கெடுபிடிப் போர் மனப்போக்

(7-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக...(சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

வெஸ்லி மானிப்பாய்
... 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு
உழைப்பவன்
(புதிய பிரதி)

## திருவழிப்பாடு

[மன்னார்]

மன்னார் புனிதவளனார் சபையினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பெற்ற பொதுக்கூட்டத்தில் எதிர்வரும் மே தினத்திற்கு முன்னர் பனங்கட்டிக் கொட்டு வட்டாரத்தில் திருவழிப்பாடு ஒன்றை நடாத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. மன்னார் புனித செபஸ்தியார் ஆலய உதவிப் பங்குத் தந்தையும் சபையின் காப்பாளருமான வண. பிதா. மொனிபேட் இத் திருவழிபாட்டை நடாத்துவார்.

5th CROWDED WEEK
REGAL JAFFNA Phone: 360
Daily 4 shous
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) (இன்று மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

இன்னும் சில தினங்கள் மட்டும்
சாந்தி யாழ் நகர் போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ராஜேஷ் கன்னு (இரட்டைவேடம்), சர்மிலாதாகூர்
"டாஹ்" ஹிந்தி
ஈஸ்ட்மன் கலர்
From 21-4-80 "THE STING" (Color)

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
(யாழ்ப்பாணம்)
சிவாஜி-சரோஜாதேவி எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
(யாழ்.நகர்) போன்: 7601
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, டீ...குமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்—புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி: 466
யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெயசுதா - அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
தர்மலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்-V. R. ஸ்ரீ நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஹோ தேவ் ஆனந்

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 5-ந்திகதி

(17-4-80) வியாழக்கிழமை

மேடம்: பணம் பறிப்பதற்காக ஒரு கோஷ்டியினர் புகழ்பாடிக்கொண்டிருப்பர் அவரிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாம் கடல் பிரயாணத்தைத் தவிர்த்துக்கொள்வது நன்று

இடபம்: தேனை இனித்து இன்று வேம்பாகக் கசக்கும் மனப்போராட்டத்திற்கு இடமுண்டு. அதிக சிந்தனைக்கு இடமளியாது அமைதியுடன் இருக்கவும் இறை நம்பிக்கை நன்று.

மிதுனம்; பிறருக்கு உதவு... ...தன் மூலம் பணம் செலவாகும் அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

கடகம்: பிரச்சினை... வந்து குவியும், எதிலும் நல்ல முடிவை எடுக்கமுடியாது திகைப்பீர்கள் சகோதரி ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம் வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு இறை ...நன்மையைத் தரும்.

சிங்கம்: புதுமையான அனுபவங்கள் கிடைக்கக்கூடும் ...திரங்களுடன் பழகுபவர்கள் புதிய சாதனையை உருவாக்குவார்கள் ...வுத்தாகப் பேவிலும் ...த்துறையில் அதிக கவனம் செலுத்தப்படும் வீட்டில் சுபகருமம் ஏற்படும்.

கன்னி: வாழ்க்கை இன்று ...மையாகச் செல்லும் எண்ணம் போல் யாவும் நடக்கும் உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் அரசியலிலும் பிரகாசிக்க இடமுண்டு

துலாம்: தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும் தனிவழியை நாடுவீர்கள் அமைதியும் பறக்கும்.

விருட்சம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவீர்கள் காத்திருந்த கண்களுக்கு கனிப்பூட்டும் விருந்து ஒன்று கிடைக்கும் மகிழ்ச்சியான தினம்.

தனு: ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் உள்ளக் ...டக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும் நிதானம் வேண்டும்.

மகரம்: நீண்ட நாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்களின் உதவிக்கு வருவர் இனிய விருப்பு மேலிடும்

கும்பம்: தொழில் துறையில் வெற்றி விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பல உண்டு.

மீனம்: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும் முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும் இன்று பொன்னான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போய்ட்டார்கள். இவங்களுக்காகத்தான் நாங்கள் போராடப்போகிறோம்' என்றார் ஆத்திரத்துடன்.

தனது பாதுகை தொலைந்து விட்டதென்று முறையிட்ட நண்பர் அதற்குமேல் அங்கே ஏன் நிற்கிறார்.

- ஊர்சுற்றி

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
(இரு வேடம்)
பட்டிக்காட்டு ராஜா
(புதிய பிரதி)(கலர்)

# காரில் சென்று ஆடுகளைக் கடத்த முயற்சி!

## பொதுமக்கள் துரத்திப் பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

காரில் வந்து ஆடுகளைத் திருட முயன்றதாகக் கூறப்படும் மூவரில் இருவரைப் பொதுமக்கள் துரத்திப்பிடித்து பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.

அவர்கள் வந்ததாகக் கூறப்படும் காரும் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தப்பி ஓடிய ஒருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

சம்பவ தினம் இரவு காரில் சென்ற மூவர் கோஷ்டி ஏழாலையில் உள்ள வீடொன்றிற்குச் சென்று அங்கு கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடுகளைத் திருட முயன்றபோது ஆடுகள் சத்தமிட்டன என்றும் சத்தத்தைக் கேட்ட விட்டின் சொந்தக்காரப் பெண் வெளியே வந்தபோது மூவர் ஆட்டுக்கொட்டிலுக்குள் நிற்பதைக்கண்டு கத்தினார் என்றும் பெண்ணின் சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் ஓடிவந்தபோது சந்தேகநபர்கள் ஓட்டம்பிடித்தனர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

பொதுமக்கள் சந்தேகநபர்களைத் துரத்திச்சென்று இருவரைப்பிடித்து சுன்னாகம் பொலிசில் ஒப்படைத்தனர்.

சந்தேகநபர்களான தம்பி முத்து யோகராசேந்திரம், முருகேசு ஞானமூர்த்தி ஆகியோர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் தப்பி ஓடியவரைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

சந்தேகநபர்களால் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் காரும் சுன்னாகம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[செ]

# மக்களுக்கு சேவைபுரிவதே ஒரே நோக்கமாம்

## வ. போ. ச. தலைவர் கூறுகிறார்

(நெல்லியடி)

"பிரயாணிகளுக்குச்சிறப்பான பஸ் சேவையை அளிப்பதற்காகவே பஸ்சேவை தேசியமயமாக்கப்பட்டது. எங்களுக்கிடையே வேறுபட்ட அரசியல் கொள்கைகள் இருப்பினும், எமது ஒரே நோக்கம் பொதுமக்களுக்கு சேவை புரிவதே எமக்கிடையே ஒற்றுமையும், கட்டுப்பாடும் இருந்தால் எமது நோக்கத்தினை சிறப்பாக நிறைவேற்ற முடியும்."

மேற்கண்டவாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா, கிளிநொச்சிச் சாலையில் புதிய நூலகத்தினைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருந்தார்

கிளிநொச்சி இ போ. ச. ஊழியர் மன்றத் தலைவர் திரு. வி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திரு. டட்லி குணசேகரா மேலும் பேசுகையில் கூறியதாவது :

நான் வடபிராந்தியத் தலைவர் பதவியை ஏற்பதற்கு முதலில் தயங்கினேன். பின்ப சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சேவை புரிய விரும்பி ஏற்றுக்கொண்டேன். நாம் இறக்கும்போது எதனையும் கூட எடுத்துச் செல்ல முடியாது. ஆனால் நாம் செய்த சேவை துணையாக வரும் என்பதில் மிகையாகாது.

பதவியுயர்வுகள் தற்போது நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

பொறியியல் பகுதி ஊழியர்களுக்கு விரைவில் ஊக்குவிப்புப் பணத்திட்டம் ஒன்று வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவித்த அவர் சிறந்த சாரதி ஒருவருக்கு பதவியுயர்வுக் கடிதத்தையும், பொறியியல் மேற்பார்வையாளருக்கு போர்மன் பதவிக்கான கடிதத்தையும் வழங்கினார்.

இயக்குநர் சபை பிரதிநிதி திரு. அலெக்சாண்டர் மற்றும் பலரும் பேசினர்.

## இந்துசமுத்திர ...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

கும் வல்லரசுப்போட்டியும் இந்துசமுத்திரப் பிரதேசத்தில் பதட்டநிலையைத் தோற்றுவித்துவருகிறது

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி தெரிவித்துள்ளார்,

இந்நாளில் உத்தியோக விஜயத்தை மேற்கொண்டுள்ள சாம்பிய ஜனாதிபதி டாக்டர் கெனத் கௌண்டாவுக்கு அளித்த இராப்போசன விருந்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. ரெட்டி மேற்கண்டவாறு கூறினார்.

இந்துசமுத்திரத்தில் இப்போதிருக்கும் பதட்டநிலையை மேலும் பெருக்கும் வகையில் வல்லரசுகள் இப்பிரதேசத்தில் ஆயுதங்களைக் குவித்துவருவது பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. வல்லரசுகளின் இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் ரெட்டி கூறினார்.

தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கலுக்கு எதிராகப் போராடும் காலகட்டம் வந்துள்ளது. எனவே உலக நாடுகள் அப் பணியை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்றும் திரு. ரெட்டி கூறினார். ( )

### பாராட்டு விழா

[மன்னார்]

சமாதான நீதவானாக நியமனம் பெற்ற வர்த்தக சங்கச் செயலாளரும், மன்னார் இந்து இளைஞர் வளர்ச்சி மன்றத் தலைவருமான திரு தம்பிப்பிள்ளை குமாரசாமிக்கு மன்னார் கடை வீதியிலுள்ள வர்த்தக சங்கங்களினால், பொது மக்களினாலும் பாராட்டு விழா அளிக்கப்பட்டது.

தேவை
யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்
✶ பிரயாணப்பைகள் (Travelling Bags)
✶ பெண்கள்கைப்பைகள் (Ladies Hand Bags)
✶ மழைப் போர்வைகள் (Rain Coats)
மற்றும் இதர தோற்பொருட்கள் தயாரிக்கவிருக்கும் கைத்தொழில் நிறுவனத்திற்கு அனுபவமும், தையல் திறமையுமுள்ள பெண்கள் தேவை மின்சாரத்தினால் இயங்கக்கூடிய தையல் மெஷின்களில் வேலைசெய்து அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை 21-4-80 க்கு முன்பு அனுப்பவும்
TRAVEL GOODS INDUSTRY
19, Stanley Road, Jaffna.
5493

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலி சந்தி
மேல்மாடி
ஆரம்பம் 5-5-80
க. பொ. த. உயர்தரம்
81, 82-ம் ஆண்டிற்கான வகுப்பு
கணக்கியல் — பாலா மாஸ்ரர்
அளவையியல்: — பிரபல ஆசிரியர்
பொருளியல்) — சுப்பிரமணியம்
வர்த்தகம் )
புவியியல்: — ராஜா கோபால்
மேலதிக விபரங்களுக்கு!
V. M. PACKKIYANATHAN.


ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## ராணுவதளபதி யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

ராணுவத் தளபதி திரு. டெனிஸ் பெரேரா நேற்று விசேட விமான மூலம் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

திரு. டெனிஸ் பெரேரா யாழ் பழைய பூங்காவில், பாதுகாப்புப் படை அதிகாரிகளுடனும், பொலிஸ் அதிகாரிகளுடனும் வடபகுதிப் பாதுகாப்பு தொடர்பாக ஆராய்ந்துவிட்டு, மாலை கொழும்பு திரும்பினார். [கொ]

செல்வா நினைவாலயம்

## 50 வண்டிகளில் மண் வரும்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவாலயக் காணியை நிரப்பி சமப்படுத்துவதற்காக ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையிலிருந்து 50 மாட்டு வண்டிகளில் மண் ஏற்றப்பட்டு ஊர்வலமாகக் கொண்டுவரப்படவுள்ளது.

50 வண்டில் மண்ணையும் அப்பகுதி மக்களே சிரமதான மூலம் நினைவாலய காணியில் இட்டு சமப்படுத்துவர்.

அன்றைய தினம் சாவகச்சேரியிலிருந்தும் உழவுயந்திரத்தில் மண் ஏற்றப்பட்டு திரு. நவரத்தினம் தலைமையில் ஊர்வலாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்படவுள்ளது. [கொ-கு]

அமரர்

## உயர்திரு. K. P. செல்லையா அவர்கள்



தோற்றம்: 22-03 1908 — மறைவு: 12-04-1980

எங்கள் குடும்பத் தலைவராகவும்
வழிகாட்டியாகவும் விளங்கிய
அமரர்
க. பொ. செல்லையா அவர்களது
(14-ந் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற)
ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டும்,
அனுதாபச்செய்திகள், மலர்வளையங்கள்
அனுப்பியும் ஆறுதல் அளித்த
உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியர்கள்
(ராஜா மில் அன்ட் மாப்பியன் மில்)
அனைவருக்கும்,
கடந்த சில வாரங்களாக
அன்னாரது நலத்திற்காக அல்லும் பகலும்
அயராது சேவையாற்றிய
டாக்டர் யோகு பசுபதி அவர்களுக்கும்,
யாழ்ப்பாணம் (ஆனைப்பந்தி)
தனியார் வைத்தியசாலை,
திருநெல்வேலி சென்றல் நேர்ஸிங் ஹோம்
ஆகிய மருத்துவ மனைகளில் கடமையாற்றும்
அனைவருக்கும்,
எமது உளங்கனிந்த நன்றியை உள்ளன்புடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைக!

திருமதி அ. செல்லையாவும்
குடும்பத்தவர்களும்.

'ராஜா றைஸ் மில்',
கொக்குவில்.

17-04-1980. — 5501

## யாழ். ஆஸ்பத்திரி புதிய கமிட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் வைத்தியசாலையின் கமிட்டி அங்கத்தவர்களாக சுகாதார அமைச்சினால் இம்மாதம் முதல் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. எஸ். சிவஞானம், உறுப்பினர்கள்: டாக்டர் கே. கனகரத்தினம், திரு. எஸ் கே. மகேந்திரன், திரு. ஆர். நடராஜசிங்கம், டாக்டர் ஏ. நடராஜா, திரு. பி. சண்முகராஜா, திரு. ஜி. டபிள்யு. அலெக்சாண்டர், திரு. இம்மானுவேல் ஜோசெப், டாக்டர் ரி. சண்முகநாதன், டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ், திரு. இ. வைத்திலிங்கம், திரு. எஸ். செல்வராஜா, திரு. எஸ். நாகராசா, திரு. டபிள்யு. ஆர். எஸ். நல்லையா, திரு. என். அமிர்தலிங்கம், திரு. எஸ், விஸ்வலிங்கம், திரு. கே வேலாயுதபிள்ளை, திரு. என். கொன்ஸ்ரான்ரயின், திரு. கே. சதாசிவம், திரு. டி. துரைசுவாமி, ஜனாப் ஷாகுல் ஹமீட் ஆகியோருடன் யாழ். சுகாதார சேவை அத்தியட்சகரும், யாழ் அரசினர் வைத்தியசாலை அத்தியட்சகரும் இடம்பெறுவர். (வெ)

## படமாளிகையை திருத்தி அமைக்க உத்தரவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நகரிலுள்ள பழமைவாய்ந்த சினிமாப் படமாளிகைக் கட்டிடம் திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றும் இத்திருத்தங்கள் செய்யப்படாதவரை அங்கு படக்காட்சி காண்பிப்பதற்கான லைசன்ஸ் இந்த ஆண்டுக்கு வழங்கப்படக் கூடாதென்று யாழ் நகர மேயர் உத்தரவிட்டிருக்கிறார்.

யாழ். றீகல் தியேட்டர் மனேஜருக்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் அனுப்பிவைத்துள்ள ஒரு கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படமாளிகையின் கூரை மற்றும் அதில்செய்யவேண்டிய திருத்தங்கள் பற்றியும் இக்கடிதத்தில் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் இத்திருத்தங்களைச் செய்துமுடித்த பின் தமக்கு அறிவிக்குமாறும் ஆணையாளர் கேட்டிருக்கிறார்.

இக்கடிதத்தின் பிரதியொன்று படம் விநியோகிப்பதை நிறுத்துமாறு திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இப்படமாளிகையின் நிலைபற்றி திரு. ஆர். சி. தம்பு மேயருக்குப் புகார் செய்திருந்தார்.

## நாற்பது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ஜன்ட் திரு. எஸ், ஜே. அன்ரன் தலைமையில் தடுத்து நிறுத்தப்பட்டு, விசாரணைக்காக யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

இதுபற்றி பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் 'ஈழநாடு' விடம் தெரிவிக்கையில்; சட்டவிரோத சைக்கிள்சவாரி மூலம் யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன' என்று கூறினார். (வெ)

ஈரான் எல்லையில் துருப்புக்கள் குவிப்பு:

## அமெரிக்காவின் செய்திக்கு சோவியத் மறுப்பு!

மாஸ்கோ, ஏப். 16

ஈரான் எல்லைக்குச் சமீபமாக சோவியத் யூனியன் தனது துருப்புக்களைக் குவித்து வருகிறது என்ற அமெரிக்காவின் செய்திக்கு சோவியத் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஈரானுக்குள் ஊடுருவல் நடத்துவதற்காக சோவியத் யூனியன் தனது துருப்புக்களைக் குவித்து வருகின்றது என்று அமெரிக்க அதிபர் திரு.கார்ட்டரின் பாதுகாப்பு ஆலோசகர் திரு. பிரன்ஸ்ஸிகி தெரிவித்திருந்தார்.

இச்செய்தி தொடர்பாக சோவியத் யூனியனின் அரசாங்க சார்புப் பத்திரிகையான 'பிராவ்டா' மறுப்புத் தெரிவித்துள்ளது. அமெரிக்காவினாலும் பார்க்க சோவியத் யூனியனினாலேயே ஈரானுக்கு அதிக பாதிப்பு என்ற வதந்தியை ஏற்படுத்துவதற்காகவே அப்பட்டமான பொய் ஒன்றை அமெரிக்கா வெளியிட்டுள்ளது என்றும் 'பிராவ்தா' எழுதியுள்ளது. [கு]

## நீதிபதிகள், அரசஊழியர்க்கு புதிய வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

நீதிபதிகள், அரசாங்க ஊழியர், கிராமசேவகர், வைத்திய அதிகாரிகள் ஆகியோரின் வீட்டுப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு பிரதமரும் உள்ளூராட்சி அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசா 3 வருட திட்டமொன்றை உருவாக்கியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் அடுத்த மூன்று வருட காலத்தில் 80 கோடி 70 லட்சம் ரூபா செலவில் சுமார் 8718 விடுதிகளும், மாடி வீடுகளும் பூர்த்தியாகும் என்று பிரதமர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா, பிரதமரின் இத்திட்டத்தைப் பாராட்டியுள்ளார்.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் அரசாங்க ஊழியருக்கு இத்திட்டம் உதவியாக இருக்குமென்றும் அந்தந்தப் பகுதிகளில் வேலை செய்வதற்கு இத்திட்டம் ஊக்கமளிக்குமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரதமரின் திட்டப்படி வைத்திய அதிகாரிகளுக்கு சுமார் 50 லட்சம் ரூபா செலவில் 26 விடுதிகள் அமைக்கப்படும். நீதிபதிகளுக்கு கொழும்பில் 18 மாடி வீடுகளும், வெளியிடங்களில் 20 வீடுகளும் அமைக்கப்படும்.

தற்போது வெளி மாவட்டங்களில் வீடுகளில்லாமல் 43 நீதிபதிகள் இருக்கின்றனர். வசதியான வீடுகள் பெறுவதற்கு வெளிமாவட்டங்களில் நீதிபதிகள் பலத்த கஷ்டத்திற்குள்ளாகியுள்ளார்கள் என நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தொண்டமான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள கால்நடைப் பண்ணைகளை பார்வையிடும் அமைச்சர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (கு)

## தேசத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குவதற்கு முயற்சிப்பதாலும் இதனால் பெரும்பான்மை இனத்தினருக்குப் பாதிப்பு ஏற்படுவதினாலும் இனக்கலவரங்களைத் தூண்டி நாட்டின் சமாதானத்திற்கு ஊறுவிளைவித்து நாட்டின் பொருளாதார அபிவிருத்திப் பயணத்தைப் பாதிப்பதினாலும் மேற்படி நபர்களை தேசத்துரோகிகளாகக் கருதி பொது இடங்களில் வைத்து அவர்களுக்குக் கசையடி வழங்கி அவர்களது குடியுரிமைகளை இல்லாமற் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது". (வெ)

## நகரை அழகாக வைத்திருங்கள்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவாலயத் திறப்புவிழா நடைபெறும் மூன்று தினங்களும் யாழ் நகரை அலங்கரித்து அழகுறச் செய்ய உதவுமாறு யாழ். மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதன் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம் 26-ம், 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தந்தை செல்வா நினைவாலயத் திறப்புவிழா வைபவங்களின் போது யாழ். நகரை அலங்கரித்து அழகாக வைத்திருக்க உதவும்படி யாழ்ப்பாணம் வர்த்தக ஸ்தாபனங்கள், கைத்தொழில் உரிமையாளர் சங்கம், நவீன சந்தை வர்த்தக உரிமையாளர் சங்கம், யாழ் பழைய சந்தை வர்த்தக உரிமையாளர் சங்கம், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வாடகைஉரிமையாளர் சங்கம் ஆகியவற்றிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கொ-கு)

... யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 17-ம் ...
Registered as a ... at G.P.O. ... The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org